விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 104 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 19 திங்கட்கிழமை (01.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## துன்னாலைப் பகுதியில் யுக்திய நடவடிக்கை

### 26 பேர் கைது

(நெல்லியடி)

யாழ்ப்பாணம், நெல்லியடி பொலிஸ் பிரிவில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டு அவர்களில் 26 பேர் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

துன்னாலை பிரதேசத்தில் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 06

### ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில்

## முக்கிய நாடொன்று உள்ளது மைத்திரி வாக்குமூலம்

### ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியீடு



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியில் முக்கிய நாடொன்று செயற்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வாக்குமூலம் வழங்கியுள்ளதாக ஆங்கில செய்தித்தாள் ஒன்று செய்தி 04

# பொது வேட்பாளரை நிறுத்தி வாக்குகளை சிதறடிக்காதீர்கள்

## தமிழ்க் கட்சிகளிடம் வஜிர எம்.பி கோரிக்கை



(கொழும்பு)

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை போட்டியிட வைத்து தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கத் தமிழ்க் கட்சிகள் முயற்சிக்கக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.**

தெற்கில் ஜனாதிபதித் தேர்தல் விவகாரமும், வடக்கில் தமிழ் பொதுவேட்பாளர் விவகாரமும் தற்போது சூடுபிடித்துள்ளன.

இது தொடர்பில் வஜிர அபேவர்தன எம்.பி. கருத்துரைக்கும் 02

எச்சரிக்கை

இன்று
ஏப்ரல் 1
முட்டாள்கள்
தினம்
ஏமாந்து விடாதீர்கள்

## எரிபொருள் விலையில் மாற்றம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இன்று முதல் அமுலாகும் வகையில், எரிபொருட்களின் விலைகளில் திருத்தம் மேற்கொண்டுள்ளது.

அதன்படி, ஒக் 15

## மே தினத்தோடு தேர்தல் களம் சூடு பிடிக்கும்

### முன்னாயத்தப் பணிகள் தீவிரம்

(கொழும்பு)

மே தினக் கூட்டத்தோடு தேர்தல் பிரசார நடவடிக்கையை முழுவீச்சுடன் முன்னெடுப்பதற்கு தென்னிலங்கையில் உள்ள பிரதான அரசியல் கட்சிகள் வியூகம் வகுத்து வருகின்றன.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி, 15

### வவுனியாவில் கைதான

## முன்னாள் போராளிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

புலிகள் அமைப்பினை மீள் உருவாக்கம் செய்ய முற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வவுனியாவில் கைதான முன்னாள் போராளியை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு 15

## தோட்டக்கிணற்றில் குடும்பஸ்தரின் சடலம்

### புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

(புன்னலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியில் தோட்டக் கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் யோகபுரம் உரும்பிராயைச் சேர்ந்த சின்னத்துரை தவராசா (வயது -53) 02

## தமிழர் சார்பில் பொது வேட்பாளர் நிராகரித்தார் சம்பந்தன்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில், தமிழர் சார்பாக ஒரு பொது வேட்பாளரினை நிறுத்துவது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் பல்வேறுபட்ட நிலைப்பாட்டினை கொண்டுள்ளன.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் 15

### இல்ல அலங்கரிப்பில் கார்த்திகைப் பூ, பீரங்கி

## தெல்லிப்பழை யூனியன் கல்லூரி நிர்வாகத்திடம் பொலிஸார் விசாரணை

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியின்போது கார்த்திகை பூ மற்றும் பீரங்கி கவச வாகன வடிவில் மேற்கொள்ளப்பட்ட இல்ல அலங்காரங்கள் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். 15





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை அதிகரிக்கும்

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் இன்று அதிக வெப்பமான காலநிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக திணைக்களம் வெளியிட்டுள்ள செம்மஞ்சள் அறிக்கையில்,

மேல், தென், வடமேல், வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்த நிலைமை ஏற்படக்கூடும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர இரத்தினபுரி, மொனராகலை, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சில இடங்களில் வெப்பச்சுட்டெண், அவதானம் செலுத்த வேண்டிய மட்டத்தில் இருக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

எனவே பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறும் போதியளவு நீரைப் ப்ருகுமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

(ந-7,10)

## பொது வேட்...

போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தியே தீருவார்.

அவர் மூவின மக்களின் ஆதரவுடன் அந்தத் தேர்தலில் வெற்றியடைந்து ஜனாதிபதிப் பதவியில் தொடர்ந்து நீடிப்பார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரைக் களமிறக்கத் தமிழ்க் கட்சிகள் ஆலோசிக்கின்றன.

வடக்கிலுள்ள சில தமிழ்க் கட்சிகள் தான் இதில் ஆர்வம் காட்டி வருகின்றன. தமிழ் பொதுவேட்பாளராக யார் களமிறங்கினாலும் அவர் வெற்றியடைய மாட்டார் என்பதைத் தமிழ்க் கட்சிகள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். எனினும், தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை வடக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் களமிறக்கினால் அங்குள்ள மக்களின் வாக்குகள்தான் சிதறடிக்கப்படும்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரைப் போட்டியிட வைத்து தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கத் தமிழ்க் கட்சிகள் முயற்சிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (ந-7,10)

## தோட்டக்...

என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் தனித்து வசித்து வந்த நிலையில் அவரைக் காணாத உறவினர்கள் தேடியபோதே சடலம் கிணற்றில் கிடப்பது தெரியவந்தது.

சம்பவ இடத்துக்குச் சென்று மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

நீரில் மூழ்கியதாலேயே மரணம் சம்பவித்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.(ந-7,10)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WU MoneyGram Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இராமசாமி திருச்செல்வம்

ஆண்டு இரண்டு முடிந்ததுவோ உங்கள்
அன்பு முகம் நீங்கிச் சென்று.
ஆனாலும் எம் மனமோ இன்னும் ஆறவில்லை
நேற்றுப் போல் இருக்குதப்பா.
காலங்கள் பல கடந்தாலும்
நீங்கள் என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள்.


(309)

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மலர்வு 17 - 01 - 1940



உதிர்வு 31 - 03 - 2024

### கணேசரத்தினம் சரஸ்வதி

ஏழாலை தெற்கு சுன்னாகத்தை வசிப்பிடமாக கொண்ட கணேசரத்தினம் சரஸ்வதி அவர்கள் 31.03.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - திரவியம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - ராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், துரைசிங்கம், செல்லம்மா மற்றும் இராசலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் தர்மகுலசிங்கம்(பாபு), கலாதேவி(கலா), மஞ்சுளாதேவி(மஞ்சு), சியாமளாதேவி(பாலா), மணிவண்ணன்(ராசன்), ஜெகதீஸ்வரன்(சிவா), கெங்காதேவி(கெங்கா), சுகந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தி, சிவகுமாரன், ஜெகநாதன், சிற்றம்பலம், குனேஸ்வரன், சுகிர்தா, விஜிதா, செல்வச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மதுரா, காலஞ்சென்ற நிமல்ராஜ் மற்றும் சரண்யா, கபில்ராஜ், கிருஸ்ணா, பானுஜன், கீர்த்திகன், விஸ்னுயன், மிர்ஜன், றிசி, அர்யூன், விஸ்னுதன், விஸ்னுயன், விஸ்னுயா, கஜீபன், அபினா, காலஞ்சென்ற லக்சிஷா மற்றும் சங்கவி, தரணீஸ், சஷ்மிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பவிசாரா, ஆரிகா, திபிசன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 01.04.2024 காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

துர்க்கா ஸ்ரோர்ஸ்
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.
077 614 1764

(320)

தகவல்:
குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 1957 . 10 . 01



மறைவு 2024 . 03 . 03

உடுத்துறை வேம்படியைப் பிறப்பிடமாகவும் தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை வீதி உடையார்வளவை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் திருமதி கணேசு சற்குணேஸ்வரி
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

கடந்த 03.03.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது தாயாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 01.04.2024 இன்று திங்கட்கிழமை காலை 5.30 மணியளவில் இன்பர்சிட்டி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 02.04.2024 அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 12.00 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(109)

கதிரவேற்பிள்ளை வீதி,
தம்பசிட்டி,
பருத்தித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை உயர்வு



(வோஷிங்டன்)

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

அதன்படி, பிரண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 87 டொலராக காணப்படுகிறது.

அமெரிக்க W.T.I மசகு எண்ணெய் பீபா ஒன்றின் விலை 83.17 டொலராகும். இது 2.24 சதவீதம் அதிகமாகும். (நி-6)

# சிறுவர் மீதான கொடுமைகள் மூன்று மடங்காக அதிகரிப்பு

## தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையகம்

(கொழும்பு)

**இலங்கையில் சிறுவர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் உடல் ரீதியான தண்டனைகளை ஒழிப்பது சிக்கலானது என தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையகத்தின் தலைவர் சன்னக உதயகுமார தெரிவித்துள்ளார்.**

குறித்த தகவலை அவர் ஊடகம் ஒன்றிற்கு தெரிவிக்கும் போதே குறிப்பிட்டுள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் அணுகுமுறைகள் காரணமாக சிறுவர்கள் உடல் ரீதியாக பாதிப்புக்குள்ளாகுவதுடன் இது குறித்து முறைப்பாடும் செய்கின்றனர்.

அதேநேரம் கடந்த பத்து ஆண்டுகளில் சிறுவர் கொடுமை மற்றும் உடல் ரீதியான தண்டனை சம்பவங்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் சிறுவர்கள் குறித்த உடல் ரீதியான தண்டனையை ஒழிக்கும் நடைமுறை விரைவாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் வலியுறுத்தியுள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-6)

# ஈஸ்டர் தாக்குதலின் 5 ஆவது வருடம்

## நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று அதிவிசேடபாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.உயிரத்த ஞாயிறு ஆராதனைகள் நடைபெறும் அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களிலும் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள், ஆராதனை நிறைவடைந்து பக்தர்கள் அனைவரும் அவரவர் வீடுகளுக்கு செல்லும் வரை அமுலில் இருந்தாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. பெரிய வெள்ளி ஆராதனை ஆரம்பமானதையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், ஈஸடர் தினமான நேற்று பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.(நி-6)

# நச்சுப்புகையை வெளியேற்றும் வாகனங்கள் நடவடிக்கை எடுக்க தயங்கும் பொலிஸார்

## போக்குவரத்து திணைக்களம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாடெங்கிலும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் நச்சுப்புகையை வெளியேற்றி வரும் நிலையில், இது தொடர்பாக வழக்குத் தொடரவோ அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கவோ பொலிஸார் தவறிவிட்டதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தின்படி, மோட்டார் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாருக்கு நச்சுப்புகையை வெளியேற்றும் வாகனங்களை சோதனை செய்து சட்டத்தை நடைமுறைப்படுத்தும் திறன் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இது தொடர்பாக பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மோட்டார் போக்குவரத்து துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நச்சுக் கறுப்புப்புகையை வெளியிடும் அரச வாகனங்கள் உட்பட்ட வாகனங்களுக்கு 2000 - 5000 ரூபாவிற்கு குறையாமல் அபராதம் விதிக்க முடியும் என்ற போதிலும் பொலிஸார் கவனம் செலுத்தத் தவறியுள்ளதாகவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-6)

# அரசாங்கம் வரிச்சலுகை வழங்கினால் பேக்கரிப் பொருட்களின் விலையை குறைக்கலாம்

## அகில இலங்கை பேக்கரி சங்கம்

(கொழும்பு)

அரசாங்கம் வரிச்சலுகை வழங்கினால் பாண் உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலையை குறைக்க முடியும் என அகில இலங்கை பேக்கரி சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் வரி அதிகரிப்பினால் பேக்கரி தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்கம் சரியான வரிக்கொள்கையை பின்பற்றினால் பேக்கரிப் பொருட்களின் விலையை குறைக்க முடியும் எனவும் அகில இலங்கை பேக்கரி சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-6)

# பொருளாதார சவால்களில் இருந்து உயிர்த்தெழ ஆரம்பித்திருக்கும் இலங்கை

## ஈஸ்டர் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

வரலாற்றில் மிக மோசமான பொருளாதார சவாலை எதிர்கொண்ட ஒரு நாடு என்ற வகையில், தாங்கிக்கொள்ளும் இயலுமை நிறைந்த தேசமாக ஆசிர்வாதத்துடன் உயிர்த்தெழ ஆரம்பித்திருக்கிறோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது உயிர்த்த ஞாயிறு தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.


பல்லின சமூகமாக வாழும் நாடு என்ற வகையில் இலங்கை தற்காலத்தில் எதிர்நோக்கும் சவால்களை வெற்றிகொள்வதற்காக ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமாகும்.

எனவே, இலங்கையர்களாகிய நாம் எமது ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் பேணுவதுடன், அதற்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு சக்திகளிடமும் சிக்கிக்கொள்ளாமல், அறிவுபூர்வமாக நாட்டின் பாதுகாப்பு, சமாதானம் மற்றும் அபிவிருத்திக்காக அர்பணிக்க வேண்டியது அவசிமாகும்.

இலங்கை கிறிஸ்தவர்களால் மிகுந்த மரியாதையுடனும் பக்தியுடனும் கொண்டாடப்படும் ஈஸ்டர் காலம் ஒரு கொடூரமான தீவிரவாத தாக்குதலை கண்டிருந்தது.

அந்த மோசமான நினைவுகள் எமது மனங்களில் இருந்து மறையாது. அதேநேரம் அதற்கு பொறுப்பு கூற வேண்டியவர்களுக்கு எதிராக சுதந்திரமாகவும் பாரபட்சம் இன்றியும் சட்ட அமுல்படுத்துவதற்கான சூழலை அரசாங்கம் உருவாக்கியுள்ளதுடன் இனிவரும் நாட்களில் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்கும் வகையில் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய அரசாங்கம் அர்ப்பணிக்கும்.

அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் ஆசீர்வதிக்கப்பட்ட மற்றும் மகிழ்ச்சியான ஈஸ்டர் நாளாகட்டும் என பிராத்திப்பதாக ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (நி-6)






இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா நள்ளிரவுத் திருப்பலி நேற்று நாடெங்கிலும் சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் போது ஆலயத்தை சூழ பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்-யோசப்நயன், தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'பதறிய' பந்துவீச்சு; 'சிதறிய' துடுப்பாட்டம்

## டில்லியிடம் வீழ்ந்தது சென்னை



ஐ.பி.எல்., லீக் போட்டியில் சென்னை அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லியிடம் வீழ்ந்தது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17வது சீசன் நடக்கிறது. விசாகப்பட்டனத்தில் நடந்த லீக் போட்டியில் டில்லி, "நடப்பு சம்பியன்" சென்னை அணிகள் மோதின.

**வோர்னர் அபாரம்**

டில்லி அணிக்கு பிரித்வி ஷா, டேவிட் வோர்னர் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. தீபக் சகார் வீசிய 5வது ஓவரில் வரிசையாக ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடித்தார் வோர்னர். முஸ்தபிஷூர் வீசிய 6வது ஓவரில் பிரித்வி ஷா "ஹட்ரிக்" பவுண்டரி விரட்டினார். ஜடேஜா பந்தை சிக்சருக்கு அனுப்பிய வார்னர், 32 பந்தில் அரைச்சதம் எட்டினார். முதல் விக்கெட்டுக்கு 93 ஓட்டங்கள் சேர்த்தபோது முஸ்தபிஷூர் பந்தில் மதீஷா பதிரனவின் கலக்கல் "பிடியெடுப்பில்" வோர்னர் (52) ஆட்டமிழந்தார்.

**பன்ட் அரைச்சதம்**

பொறுப்பாக ஆடிய பிரித்வி ஷா (43), ஜடேஜா "சுழலில்" சிக்கினார். பதிரானா "வேகத்தில்" மார்ஷ் (18), டிரிஸ்டன் ஸ்டப்ஸ் (0) போல்டாகினர். பதிரன வீசிய 19வது ஓவரில் வரிசையாக ஒரு சிக்சர், 2 பவுண்டரி அடித்த அணித் தலைவர் ரிஷாப் பன்ட் (51) அரைச்சதம் கடந்தார். டில்லி அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்கள் எடுத்தது.

அக்சர் படேல் (7), அபிஷேக் போரெல் (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ரகானே ஆறுதல்**

கடின இலக்கை விரட்டிய சென்னை அணிக்கு அணித் தலைவர் ருதுராஜ் கெய்க்வாட் (1), ரச்சின் ரவிந்திரா (2) ஏமாற்றினர். பின் இணைந்த அஜின்கியா ரகானே (45), டேரில் மிட்சல் (34) ஜோடி நம்பிக்கை கொடுத்தது. முகேஷ் குமார் பந்தில் ஷிவம் துபே (18), சமீர் ரிஸ்வி (0) ஆட்டமிழந்தனர். சென்னை அணி 120 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

**தோனி ஏமாற்றம்**

பின் இணைந்த ரவிந்திர ஜடேஜா, தோனி ஜோடி போராடியது. பவுண்டரி அடித்து தனது ஓட்டக்கணக்கை ஆரம்பித்த தோனி, கலீல் அகமது பந்தை சிக்சருக்கு அனுப்பினார். கடைசி 2 ஓவரில் வெற்றிக்கு 46 ஓட்டங்கள் தேவைப்பட்டன. முகேஷ் குமார் வீசிய 19வது ஓவரில் தோனி ஒரு ஓட்டம் மட்டும் எடுத்தார். இந்த ஓவரில் 5 ஓட்டம் மட்டும் கிடைத்ததால், கடைசி ஓவரில் வெற்றிக்கு 41 ஓட்டங்கள் தேவைப்பட்டன. நார்ட்ஜே வீசிய 20ஆவது ஓவரில் 2 சிக்சர், 2 பவுண்டரி உட்பட 20 ஓட்டம் மட்டுமே கிடைத்தது. ஒருவேளை 19வது ஓவரில் தோனி 20 ஓட்டங்களுக்கு மேல் எடுத்திருந்தால் அணியை கரை சேர்த்திருக்கலாம்.

சென்னை அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 171 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

தோனி (37 ஓட்டங்கள், 3 சிக்சர், 4 பவுண்டரி), ஜடேஜா (21) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (7,10)




## குஜராத் இலகு வெற்றி



ஹைதராபாத் அணியை 7 விக் கட் டுக்களால் குஜராத் அணி வீழ்த்தியது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17வது சீசன் நடக்கிறது. அகமதாபாத்தில் நேற்று நடைபெற்ற 12ஆவது லீக் போட்டியில் ஹைதராபாத் - குஜராத் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

முதலில் களமிறங்கிய ஹைதராபாத் அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்கள் மயங்க் அகர்வால் 16 ஓட்டங்களும் டிராவிஸ் ஹெட் 19 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த மார்க்ரம் 17, அபிஷேக் சர்மா 29, கிளாசன் 24, ஷபாஷ் அஹ்மத் 22, அப்துல் சமத் 29 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் ஹைதராபாத் அணி 8 விக்கெட் இழந்து 162 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் குஜராத் அணியின் மோஹித் சர்மா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

163 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு அடுத்து களமிறங்கிய குஜராத் அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்கள் சஹா 25 ஓட்டங்களிலும் கில் 36 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த சாய் சுதர்சன் 45 ஓட்டங்கள் எடுத்து கம்மின்ஸ் பந்தில் ஆட்டமிழந்தார். டேவிட் மில்லர் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களும் விஜய் சங்கர் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களும் எடுத்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

இறுதியில் குஜராத் அணி 19.1 ஓவரில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 168 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக குஜராத்தின் மோகித் தெரிவானார். (7,10)

## முக்கிய...

வெளியிட்டுள்ளது.

அண்மையில் அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு (CID) அழைக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போதே இந்த வாக்குமூலத்தை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, 2019ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவி வகித்த போதே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்நிலையில் கண்டிக்கு பயணம் செய்திருந்த அவர், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களில் யார் சம்பந்தப்பட்டிருந்தனர் என்பது தொடர்பில் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்திருந்தார்.

அத்துடன், இது தொடர்பில் தாம் நீதிமன்றத்தில் இரகசிய வாக்குமூலம் ஒன்றையே வழங்கமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், அதற்கு முன்னதாகவே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அவர் அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

குறித்த வாக்குமூலத்தின்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்புலத்தில் முக்கிய நாடொன்று செயற்பட்டதாக மைத்திரிபால கூறியுள்ளதாக குறித்த ஆங்கில செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

அந்த தாக்குதல்களை தடுக்கத் தவறிய குற்றச்சாட்டுக்காக மைத்திரிக்கு உயர்நீதிமன்றம் பெருந்தொகை அபராதத்தையும் விதித்துள்ளது.

இதேவேளை தாக்குதல்கள் இடம்பெற்ற பின்னர், ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளே இதற்குக் காரணம் எனவும் அதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் மைத்திரிபால குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு வழங்கப்படும் தெளிவற்ற வாக்குமூலங்களுக்கு மத்தியிலேயே மாளிகாகந்த நீதிமன்றம் மைத்திரிபால சிறிசேனவை எதிர்வரும் 4ஆம் திகதி வாக்குமூலம் வழங்குவதற்காக அழைப்பு விடுத்துள்ளது.

அதேவேளை, மைத்திரிபால வழங்கும் வாக்குமூலத்தின் மூலம் உண்மை தன்மையை வெளிக்கொண்டு வர முடியும் என குறித்த செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

இதேவேளை அண்மையில் மைத்திரிபால சிறிசேன அமெரிக்காவுக்கான பயணமொன்றை மேற்கொண்டதன் பின்னரே இவ்வாறான தகவல்களை வெளியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வெசும வேலைத்திட்டத்தினால் முடக்கப்பட்டுள்ள சமுர்த்தி திட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் அஸ்வெசும வேலைத் திட்டத்தினால் முழு சமுர்த்தி திட்ட மும் முடக்கப்பட்டுள்ளதாக அகில இல ங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

இதன்படி, சமுர்த்தி திட்டத்தின் கீழ் இயங்கி வந்த சமூக பாதுகாப்பு நிதி, வீடமைப்பு கடன், கட்டாய சேமிப்பு நிதி என்பன தற்போது முற்றாக முடக்கப் பட்டுள்ளதாகவும், சமுர்த்தி பயனாளிக ளுக்கு கிடைக்க வேண்டிய அனைத்து நன்மைகளும் இழக்கப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

16 இலட்சம் சமுர்த்தி பயனாளி களில் 8 இலட்சம் பேரே அஸ்வெசும திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள தாகவும் அவர்களில் எவரும் சமுர்த்தி சமூக பாதுகாப்பு திட்டத்துடன் இணை க்கப்படாததால் சமூக பாதுகாப்பு நிதி யத்திற்கு பணம் வரவு வைக்கப்படா ததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக வும் அவர் தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு கடன் மூலம் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டதுடன் நாற்பத்து மூவாயிரம் பிள்ளைகளு க்கு புலமைப்பரிசில் நிதியும் வழங் கப்பட்டது.

ஏறக்குறைய இருபது வருடங் களாக சமுர்த்தி திட்டத்தில் அங்கம் வகிக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்கள் நிவாரணத் திட்டத் தினால் இந்த நன்மைகள் அனைத் தையும் இழந்துள்ளமை பாரதூர மானது எனவும் ஜனாதிபதியிடம் சந்தர்ப்பம் கோரியுள்ளதாகவும் ஜகத் குமார மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# பதவிகளில் இருந்து ராஜபக்ஷாக்கள் விலக வேண்டும்

## சமல் ராஜபக்ஷ அதிரடிக் கருத்து

(கொழும்பு)

**கட்சி பதவிகளில் இருந்து சிறிது காலம் ராஜபக்ஷாக்கள் விலக வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ச வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கடந்த வாரம் கூடிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறைவேற்று சபையில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விஜேராமவில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தி யோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவி க்கு நாமல் ராஜபக்ஷவின் பெயர் முன் மொழியப்பட்ட போதே சமல் ராஜபக்ஷ இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருந் தார்.

எனினும், சமல் ராஜபக்ஷவின் கருத்தையும் மீறி பொதுஜன பெரமுன வின் தேசிய அமைப்பாளராக நாமல் ராஜ பக்ஷவை நியமிக்க செயற்குழு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (நி-6)




# அந்தியேட்டி அழைப்பிதழ்



மாசி மாதம் 21 ஆம் நாள் (04.03.2024) திங்கட்கிழமை கனடாவில் சிவபதமடைந்த

**அமரர். நடராஜா இராஜஸ்ரீதாசன்**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் பங்குனி மாதம் 21 ஆம் நாள் (03.04.2024) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள அன்னாரது சகோதரன் N.P.ஸ்ரீந்திரனது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

(c-0039)

கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு.

தகவல் திரு.திருமதி.ஸ்ரீந்திரன்.


# இராசிபலன்

01.04.2024
பங்குனி 19, திங்கட்கிழமை
சப்தமி பிற்பகல் 5.04 மணிவரை

மூலம் முன்னிரவு 7.20 மணிவரை
சுபநேரம் 12.11- 1.41 மணிவரை
இராகுகாலம்-7.41- 9.11 மணிவரை

சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை

வளவன்

**மேஷம்:** அச்சுறுத்தல்கள் அக ன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழ காக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**கடகம்:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பகை யொன்று நட்பாக லாம், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள்.

**துலாம்:** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப் புண்டு, எடுத்த காரிய ங்கள் எளிதில் கைகூடும், செய் தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்:** தொழில் ரீதியான இடமாற்றங்கள் ஏற் படலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படும் வாய் ப்புண்டு, சயனசுகக் குறைவான நாள்.

**ரிஷபம்:** குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், விரயங்கள் மேலோ ங்கும் நாள், உடல் நலன் பற்றிய கவலைகள் உருவாகி மறை யும்.

**சிம்மம்:** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெற லாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** பக்கபலமாக இருப்ப வர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், வருங் கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அனைத்தி லும் வெற்றிபெற இஷ்ட தெய்வ த்தை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்:** குடும்பத்தில் மகி ழ்ச்சி கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகை யில் அமையும்.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக் கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கல்யாணக் கனவு கள் நனவாகலாம்.

**கன்னி:** இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், கொள்கைப்பிடிப் போடு செயற்படுவீர்கள், குடும்ப த்தினர் உங்களின் சொற்கேட்டு நடக்க முற்படுவர்.

**தனுசு:** சோம்பலை விலக்கு வது நல்லது, திடீர் பயணத்தால் வழ க்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், சவால் களை சாமர்த்தியமாகச் சமாளிப் பீர்கள்.

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுபநிகழ்ச்சிகளில் கல ந்து மகிழும் வாய்ப் புண்டு, மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்பனுக்கு கோபம் அநாவசியமாக வரும்.

# துன்னாலைப் பகுதியில் யுக்திய நடவடிக்கை

## 26 பேர் கைது

(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஆண், பெண் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுவரும் யுக்திய நடவடிக்கையின் ஒரு கட்டமாக இது இடம்பெற்றுள்ளது.

நெல்லியடி, பருத்தித் துறை, வல்வெட்டித்துறை பொலிஸார் காங்கேசன்துறை இரண்டுக்கும் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலும், விசேட அதிரடி படையினரும் இணைந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை 9 மணியிலிருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணிவரை இச்சுற்றிவளைப்பு இடம்பெற்றது.

இதன்போது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட மற்றும் மோதலில் ஈடுபட்ட, அடையாள அட்டை இன்றிய மேலும் சிறுகுற்றங்கள் புரிந்த ஆண், பெண் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-6-33)

# மெய்வல்லுநர் போட்டி


(யாழ்ப்பாணம்)

யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க் கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பாடசாலையின் முதல்வர் க.தவகீஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆறுமுகம் யோகலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)




# யாழ்.செல்வா சதுக்கத்தில் தந்தை செல்வாவிற்கு அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 126 ஆவது பிறந்த தினத்தினை முன்னிட்டு, நேற்று ஞாயிற்றுக் கிழமை யாழில் உள்ள செல்வா சதுக்கத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தந்தை செல்வா அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில், நடைபெற்ற நிகழ்வில் தந்தை செல்வாவின் நினைவு தூபிக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப் பட்டது.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம் உள்ளிட்ட தமிழரசுக் கட்சிஉறுப்பினர்கள், பொது மக்கள் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர். (நி-6-33)





புத்தூர் யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல திறனாய்வுப் போட்டி கடந்த வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் வெற்றிபெற்ற இல்லத்திற்கான கேடயமும் வழங்கி வைக்கப்பட்டது.

# காட்சிப்படுத்தப்பட்டுள்ள வாகன இலக்கத்தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்திலிருந்து 2024.03.20 ஆம் திகதி யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலக https://dmtappointments.dmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021 211 7116 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து, அதற்காக தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந்தகவலுடன் புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமைமாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டுந்தாள் என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-6)



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் சர்வதேச மகளிர் தின நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பெண் முயற்சியாளர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படம்:-சுதேசன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 | 200 | 140 |
| உருளைக்கிழங்கு | 180 | 150 | 170 | 180 | 150 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 180 | 200 | 150-200 |
| தக்காளி | 80 | 100 | 120 | 100 | 60-80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 140 | 200 | 120-140 |
| கோவா | 250 | 200 | 230 | 240 | 200 |
| கரட் | 300 | 350 | 300 | 350 | 300 |
| பூசணி | 180 | 120 | 140 | 150 | 100 |
| புடோல் | 120 | 150 | 120 | 100 | — |
| வாழைக்காய் | 150 | 120 | 130 | 200 | 100-120 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300-400 | 300 | 200-300 |
| பெரிய வெங்காயம் | 450 | 580 | 550 | 500 | 500 |
| பாகற்காய் | 300 | 300 | 250 | 250 | 300 |
| வெண்டக்காய் | 150 | 200 | 140 | 300 | 100-150 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 120 | 150 | — |
| பயற்றங்காய் | 250 | 300 | 180 | 220 | 250-300 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 300 | 250 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 250 | 200 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 900 | 600 | 800 | 300-700 |
| போஞ்சி | 300 | 200 | 250 | 250 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | — | 180 | — |
| கீரை – 1 பிடி | 140 | 100 | 100 | 100 | 60 |
| தேசிக்காய் | 200 | 350 | 350 | 300 | 200-300 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 130 | 80 | 80-120 | 50-100 |
| இராசவள்ளி | 400 | 400 | 450 | 400 | — |
| வெங்காயப்பூ | 200 | 200 | — | 400 | 120 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 120 | 60 | 80 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 100 |
| [illegible] | 80 | — | — | — | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சமூகவலைத்தளங்களில் அதிகரிப்பு

(கொழும்பு)

**சமூக வலைத்தளங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதாக கணனி குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.**

குறிப்பாக முகப்புத்தகம் மூலம் இடம்பெறும் மோச டிகளே அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் சமூக வலைத்தளங்கள் ஊடாக இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் 1,500 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில், பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களே அதிகளவில் பதிவாகியுள்ளதாக கணனி குற்றப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-6)

# முட்டை விலை குறைய வாய்ப்பு

(கொழும்பு)

ஏப்ரல் மாதத்தில் உள்ளூர் முட்டை ஒன்றின் விலை 35 ரூபாவாக கொண்டு வரப்படும் என விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு காலத்தில் உள்ளூர் முட்டையின் விலையில் இந்த மாற்றம் ஏற்படும் சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளாந்த உள்நாட்டு கோழி முட்டை உற்பத்தி மொத்த நாளாந்த தேவையை விட அதிகமாக இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். உளளூர் கோழிப் பண்ணைகளில் முட்டை உற்பத்தி ஏற்கனவே 75 லட்சத்தைத் தாண்டியுள்ளதாக முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு கூறுகிறது. தற்போது சந்தையில் கோழி முட்டையின் விலை 45-50 ரூபாவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## எதிராளிக்கு அழைப்பாணை
## கல்முனை மாவட்ட நீதிமன்றில்

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் பிரிவு 608(2)(b) இன் கீழான விண்ணப்பம்

தவராசா ராசவதனி
இல.175,மத்திய வீதி,
சேனைக்குடியிருப்பு- 1 B
கல்முனை

வழக்காளி

வழக்கு இல: DCK/D/2447/ 2023
தன்மை:(மணவிலக்கு)

எதிர்

இரத்தினசிங்கம் சிறிகரன்
மானிப்பாய் வீதி, கட்டுடை
மானிப்பாய்- மேற்கு
யாழ்ப்பாணம்

எதிராளி

மேற்குறித்த எதிராளிக்கு

உமக்கெதிராக பிராதில் கேட்டுக்கொண்ட நிவாரணங்களைக் கோரி வழக்காளி வழக்குத் தொடர்ந்திருப்பதனால். இதனோடனைத்திருக்கும் பிராது. சத்தியக்கடதாசி என்பவற்றிற்கு இந்நீதிமன்றத்தில் எதிர்வரும் 2024.04.26 ம் அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ மறுமொழியிணைக்கும்படி இத்தால் பணிக்கப்படுகின்றீர். அப்படித் தவறும் பட்சத்தில் வழக்கு ஒருமுக விசாரணைக்கு எடுக்கப்படும்.

நீர் சட்டத்தரணி மூலம் தெரியபாதவிடத்து. உமக்கு அறிவித்தல் பிறப்பிக்க வேண்டிய விலாசத்தைப்பதிவு செய்ய வேண்டும்.

கட்டளைப்படி
பதிவாளர் மாவட்ட நீதிமன்றம் கல்முனை — REGISTRAR DISTRICT COURT KALMUNAI

குறிப்பு:விசாரணையை நிர்ணயிக்கும் திகதி பற்றி உமக்கு அறிவித்தல் வேண்டுமாயின் 80 ஆம் பிரிவின்படி உமது விலாசத்தையும் பதிவுத்தபாற் கட்டணத்தையும் பதிவாளரிடம் செலுத்தவும்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர் மாவட்ட நீதிமன்றம் கல்முனை — REGISTRAR DISTRICT COURT KALMUNAI

திகதி. 26.03.2024.

## SUMMONS TO THE DEFENDANT
## IN THE DISTRICT COURT OF KALMUNAI

An application under Civil Procedure code sec 608 (2) (b)

Thavarasa Rasavathani
No.175, Central Road,
Chenaikkudiyiruppu-1B
Kalmunai-03

Plaintiff

Case No: DCK/D/2447/2023
Nature: Divorce

VS

Iraththinasingam Sirikaran
Manipay Road, Kaddudai
Manippay-West Jaffna

Defendant

To the above named Defendant

WHEREAS the above-named plaintiff has instituted an action against you as prayed in the plaint and affidavit.

You are hereby required to file your answer in this court, if any, to the plaint annexed herewith on or before 2024/4/26 and to take notice that in default of your filing answer, the action will be proceeded with and heard ex parte.


If you do not appear by a registered attorney you are require to file a memorandum stating an address at which all legal notices may be saved.

By Order of Court
Registrar District Court Kalmunai — REGISTRAR DISTRICT COURT KALMUNAI

Note:If you desire to receive notice of the date on which the above action will be called in open court, in order to fix the date of trial, you are required you are required by section 80 to furnish to the Registrar of this Court a registered address and tender stamps to the requisite value to cover postage by registered post.

By Order of Court
Registrar, District Court Kalmunai. — REGISTRAR DISTRICT COURT KALMUNAI
Date: 26.03.2024

# பெரமுனவின் தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ஷ நியமனம்



(கொழும்பு)

பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளராக பசில் ராஜபக்ஷ இருந்து வந்த நிலையில் தற்போது அக்கட்சியின் புதிய தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு :1986 - இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம் :6'
தகைமை/தொழில்: BA Project lead ventures (Canada)
எதிர்பார்ப்பு –பட்டதாரி
தொ.இ: B/14392

பிறப்பு:1994 - இந்து
நட்சத்திரம்: சித்திரை
சூரி செவ் 11 இல்
கி.பா: 31
உயரம் :5'4"
தகைமை/தொழில்: IT மொழி பெயர்ப்பாளர்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: B/14393

பிறப்பு:-1985-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
சூரி செவ் 4 இல்
கி.பா: 26 1/4
உயரம் :5'5"
தகைமை/தொழில்:O/L. புடைவைக்கடை (சொந்தம்)
எதிர்பார்ப்பு: ஓரளவு படித்த பெண்
தொ.இ: B/14395

பிறப்பு: 1989- றோமன் கத்தோலிக்கம்
நட்சத்திரம்:
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:- சட்டத்தரணி
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ: B/14396

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு -1996
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 14 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSC , MBA , Research Officer(NGO)
எதிர்பார்ப்பு: வைத்தியர் பொறியியலாளர்
தொ.இ: G/12936

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: விசாகம்
சூரி செவ் 2 இல்
கி.பா: -1 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L, மணமகள் விவாகரத்து
எதிர்பார்ப்பு: குணமுள்ள ஆண்
தொ.இ: G/14350

பிறப்பு -1997- இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: -63
உயரம் :5'4"
தகைமை/தொழில்: சித்த மருத்துவ பட்டதாரி
எதிர்பார்ப்பு: அரச.தனியார் உத்தியோகம்
தொ.இ: G/14370

பிறப்பு -1996-இந்து
நட்சத்திரம்: பரணி
சூரி செவ் 3 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L . Nursing Student
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14379

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாளில் வீடுகளில் வீணாகும் உணவினால் 100 கோடி மக்களின் பசியைத் தீர்க்கலாம்- ஐ.நா அறிக்கை


(ஜெனிவா)


உலகளாவிய உணவு விரயம் தொடர்பான அறிக்கையை ஐ.நா வெளியிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் 5 இல் 1 பங்கு அளவில் உணவு விரயமானதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் 63 கோடி தொன், உணவகங்களில் 29 கோடி தொன், சில்லறை கடைகளில் 13 கோடி தொன் என உலக அளவில் 105 கோடி தொன் உணவு விரயம் செய்யப்படுகிறது.

இதன்படி உலக அளவில் வீடுகளில் ஒருநாள் வீணாகும் உணவைக் கொண்டு





100 கோடி மக்களின் பசியைத் தீர்க்க முடியும்.

குறிப்பாக, அதிக வெப்ப நிலை நிலவும் நாடுகளில் உள்ள வீடுகளில் தனிநபர் உணவு விரயம் அதிகமாக உள்ளது. அதிக வெப்ப நிலையால், உணவை சேமித்து வைப்பது அங்கு சவாலாக உள்ளதால் விரயம் அதிகம் நிகழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து ஐ.நாவின் சுற்றுச்சூழல் திட்டப் பிரிவின் செயல் இயக்குநர் ஆண்டர்சன் கூறுகையில், "உணவு விரயம் என்பது உலக அளவில் நிகழ்ந்து வரும் துயரமான விடயம். இலட்சக்கணக்கான மக்கள் உணவின்றி பசியில் வாடும் சூழலில், உணவுகள் எந்தக் கணக்குமின்றி வீணாக்கப்படுகின்றன.

சுற்றுச்சூழல் சார்ந்தும் இது பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதில் ஆறுதலான விடயம், நாடுகள் நினைத்தால் உணவு விரயத்தை கட்டுப்படுத்த முடியும். எனவே, உலக நாடுகள் உணவு விரயத்தை கட்டுப்படுத்த இலக்கு நிர்ணயித்து செயற்பட வேண்டியது அவசியம்" என்று தெரிவித்துள்ளார். (நி-6)

## பாரிஸை பாதுகாக்க வெளிநாட்டு உதவியை நாடும் மக்ரோன்



(பாரிஸ்)

பாரிஸில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் தனது நட்பு நாடுகளில் இருந்து பொலிஸாரின் உதவியை நாடியுள் ளார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளதை தொடர்ந்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 22 ஆம் திகதி ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் பயங்கர தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றது. அதில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டதோடு பலர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

இந்நிலையில், பாரிஸில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளதால் போட்டிகளின் போது பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு பிரான்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்தோடு, பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சகம், சில குறிப்பிட்ட சிறப்புப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக, குறைந்த எண்ணிக்கையிலான இராணுவ வீரர்களை அனுப்பித் தருமாறும் வெளிநாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பணயக் கைதிகளாக பொதுமக்கள் தடுத்து வைத்த ஆயுததாரி

### நெதர்லாந்தில் பரபரப்பு

(நெதர்லாந்து)

நெதர்லாந்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பொது மக்கள் பலர் பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்கொலை தாக்குதல் தாரி ஒருவரினால் குறித்த மக்கள் அச்சுறுத்தப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் இந்த செயலானது பயங்கரவாத நோக்கமல்ல என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளனர். (நி-6)

## செனகல் நாட்டுக்கு புதிய ஜனாதிபதி



(செனகல்)

செனகல் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி கட்சி வேட்பாளர் பஸ்ஸிரோ டியோ மயே ஃபயே வெற்றிபெற்றுள்ளார்

இந்த நிலையில் அவர் நாட்டின் ஐந்தாவது ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

செனகல் ஜனாதிபதி தேர்தலில் ஆளும்தரப்பு வேட்பாளர் அமடோ பா 35 வீத வாக்குகளை மாத்திரமே பெற்றிருந்த நிலையில் எதிர்த்தரப்பு வேட்பாளர் பஸ்ஸிரோ டியோமயே ஃபயே 54 வீத வாக்குகளைப் பெற்றிருந்தார்

இந்த நிலையில் செனகலின் புதிய ஜனாதிபதியாக பஸ்ஸிரோ டியோமயே ஃபயே நாளை பதவியேற்கவுள்ளார் (நி-6)

## சூடா... 5 மில்... உயிரி...

(சூடான்) சூடானில் பட்டி... அபாயம் அதிக... உதவிகள் அவசி... சபை தெரிவித்து...

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இராணுவம் மற்றும் துணை இராணுவ குழுக்களுக்கிடையே ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் காரணமாக உணவுப் பொருட்களின் விநியோகம் தடைப்பட்டமையே இதற்கு காரணமென

சுட்டி... சு... மக்க... டுள்ள... டுள்ள... அ...

## சிரியாவில் வா... நடத்திய இஸ்...

(டமாஸ்கஸ்)

சிரியாவின் வடக்கு நகரமான அலெப்போவில் லெபனானின் ஹிஸ்புல்லா இயக்கத்தினரை இலக்கு வைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது.

அலெப்போ சர்வதேச விமான நிலையத்திற்கு அருகே நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 44 பேர் உயிரிழந்துள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர்.

அவர்களில் 36 பேர் சிரியா இராணுவத்தினர் எனவும் 7 பேர் ஹிஸ்புல்லா படையினர் எனவும் ஒருவர் மற்றோர் ஈரான் ஆதரவு ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1967 ஆம் ஆண்டு நடைபெற்ற '6 நாள்' போரின் போது சிரியாவின் கொலான் குன்றுகள் பிரதேசத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றிய இஸ்ரேல், அதனை தங்கள் நாட்டுடன் இணைத்துக் கொண்டது. எனினும் இந்த நடவடிக்கையை சர்வதேச நாடுகள் அங்கீகரிக்கவில்லை.

இந்த விவகாரத்தில் சிரியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே தொடர்ந்து பகை...

இ... வறை... பூண்... றனை... டின் ... ஆயுத... ளது ... இ... அண்... வருப்... அடங்... ஆதர... யான... ந்த ஒ... குள் ... பட்ட... அதை... முற்றி... ரைத்... செலு... தீவிர... னர். இ... தினர்... தல் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...னில் பட்டினிச் சாவு! ...லியன் மக்கள் பாதிப்பு!

## ...ரிழப்பு நாளுக்கு நாள் அதிகரிப்பு

...ட்டினியால் மக்கள் உயிரிழக்கும் ...அதிகரித்துள்ளதால், உடனடி ...அவசியமென ஐக்கிய நாடுகள் ...ித்துள்ளது.



...சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுடானில் சுமார் 5 மில்லியன் மக்கள் பட்டினியை எதிர்கொண்டுள்ளதாக ஐ.நா அறிக்கை வெளியிட்டுள்ளது.

அவர்கள் போஷாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் 3.6 மில்லியன் பேர் சிறுவர்கள் எனவும் 1.2 மில்லியன் பேர் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளே பட்டினியால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 8 மில்லியன் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ள தாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், சூடானில் எதிர் வரும் மாதங்களில் பட்டினி நிலை மேலும் அதிகரிக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# ...வான்வழித் தாக்குதலை ...ஸ்ரேல் - 44 பேர் உயிரிழப்பு

...பகை நிலவி வருகிறது.

இந்தச் சூழலில், இஸ்ரேலை உலக வரைபடத்திலிருந்து அழிப்பதாக உறுதி பூண்டுள்ள ஈரானுடன் சிரியா நல்லுறவைப் பேணி வருகிறது. அந்த நாட்டின் ஆதரவுடன் செயற்படும் பல்வேறு ஆயுதக் குழுக்களுக்கு சிரியா தங்களது நாட்டில் இடமளித்துள்ளது.

இதில், இஸ்ரேலின் இன்னொரு அண்டை நாடான லிபியாவில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப்பினரும் அடங்குவர். இந்த நிலையில், ஈரான் ஆதரவு பெற்ற மற்றொரு ஆயுதப் படையான ஹமாஸைச் சேர்ந்தவர்கள் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து 1,200 இற்கும் மேற்பட்டவர்களை படுகொலை செய்தனர். அதையடுத்து, ஹமாஸ் அமைப்பை முற்றிலும் ஒழித்துக்கட்டுவதாக சூளுரைத்த இஸ்ரேல், அவர்கள் ஆட்சி செலுத்தி வந்த காசா பகுதியில் தீவிர தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த போரில் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் ஹமாசுக்கு ஆதரவாக தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதற்கு



இஸ்ரேலும் பதிலடி கொடுத்து வருகிறது.

மறுபுறம், வடக்கு எல்லையில் அமைந்துள்ள சிரியாவில் ஈரான் இராணுவ ரீதியில் செல்வாக்கு பெறக்கூடாது என்று இஸ்ரேல் தொடர்ந்து கூறிவருகிறது.

இதன் காரணமாக, சிரியா எல்லைக்குள் ஈரான் ஆதரவுப் படையினர் மீது இஸ்ரேல் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# கடற்கொள்ளையர்களின் பிடியிலிருந்து 23 பாகிஸ்தான் பிரஜைகள் மீட்பு

(இஸ்லாமபாத்)

அரபுக்கடலில் கடற்கொள்ளையர்களின் பிடியிலிருந்த 23 பாகிஸ்தான் பிரஜைகள் இந்திய கடற்படையினரால் பாதுகாப்பான முறையில் மீட்கப்பட்டுள்ளனர்

அரபுக்கடலில் சுமார் 12 மணிநேர போராட்டத்தின் பின்னர் குறித்த தரப்பினர் மீட்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



இதன்போது கடற்கொள்ளையர்களின் பிடியிலிருந்த ஈரானிய கப்பலொன்றையும்இந்திய கடற்படையினர் மீட்டுள்ளனர். (நி-6)

### கடந்த ஆண்டு இந்தியாவில்

# சுமார் 25 லட்சம் பேர் காசநோயினால் பாதிப்பு

(டில்லி)

இந்தியாவில் கடந்த 2023 ஆம் ஆண்டு 25.55 லட்சம் பேர் காசநோயால் பாதிக்கப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளது.

இந்திய காசநோய் அறிக்கையின்படி.இந்த தகவல் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"கடந்த ஆண்டு இந்தியாவில் 25.55 லட்சம் பேர் காசநோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

1960 ஆம் ஆண்டுகளில் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம் தொடங்கப்பட்ட நிலையில், முதல் முறையாக 25.55 லட்சம் பேருக்கு மேல் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# பொன்னாவரசு



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical name-Cassia sophera
Family-Fabaceae

இது பெருஞ்செடி வகையைச் சேர்ந்தது. 1-3 மீற்றர் உயரம் வரை வளரக் கூடியது. இலைகள் நீள் வட்ட அல்லது வேல் உருவானதென இருக்கும். பூக்கள் மஞ்சள் நிறமுடையவை. கொத்துக் கொத்தாக பூக்கும் கூட்டிலை அமைப்புடையது. சிறிய விதைகள் கடும் மண்ணிறம் உடையது. மாசி,பங்குனி மாதங்களில் பூக்களை காணலாம் விதைகள் மூலம் இதனை இனவிருத்தி செய்யலாம். யாழ். மாவட்டங்களில் தோட்ட வெளிகளில் நிழலை விரும்பும் தாவரமாக வளரக்கூடியது.

இதன் இலையை துவையல் செய்து சாதத்துடன் கூட்டி உண்ண உடலில் உண்டாகும் வெப்பம் தணிந்து இலகுவில் மலம் கழியும். இதனை பருப்புடன் சேர்த்து கடைந்தும் உண்ணலாம்.

பொன்னாவரசு இலையை அம்மியில் வைத்து நன்கு அரைத்து, கறி மஞ்சள் சேர்த்து மீண்டும் நன்கு அரைத்து, சிரங்கு உள்ள இடத்தில் கனமாக பூசி 15 நிமிட நேரம் ஊற வைத்து, பின்பு ஈரம் உலர்ந்த பின் சிரங்குள்ள இடத்தில் தேங்காய் எண்ணெய் தடவி தேய்த்து தடவிவர இலகுவில் சிரங்குகள் சிரங்குகள் ஆறும்.

பொன்னாவரசு வேர் 30 கிராம், சீரகம், மிளகு, சுக்கு ஒவ்வொன்றும் 5g எடுத்து இலேசாக தட்டி, சட்டியில்



போட்டு நீர் விட்டு குடிநீர் காய்ச்சி குடித்து 30-60 மில்லிலீற்றர் காலை, மாலை பருகி வர கல்லீரல்,மண்ணீரல் சம்பந்தமான நோய்களுக்கு சிறந்ததாகும்.

இதன் இலைகளை பழச்சாறு விட்டு அரைத்து வட்டக்கடிக்கும் பூசலாம். காமாலை நோய்க்கு இதனுடன் இலைகளை ஒரு கைப்பிடி எடுத்து 50 மில்லிலீற்றர் நீரில் 15-20 நிமிட நேரம் ஊற வைத்து வடித்து காலையில் எடுக்கலாம். வட்டக் கடிக்கு இதன் இலைச்சாறுக்கு பதில் இதன் வேரை பழச்சாறு விட்டு அரைத்து பூசலாம்.

இதனுடைய இலை, வேர், வேர்ப் பட்டை, விதை இவைகள் எல்லாவற்றையும் சேர்த்து குடிநீர் காய்ச்சி 30 மில்லி காலையில் கொடுக்க சிறுநீர் நன்கு கழியும். பொன்னாவரைக் கீரையை அடிக்கடி சமைத்துச் சாப்பிட்டு வந்தால் உடலில் அதிக வியர்வை உண்டாகிமேலும் மலம் மற்றும் சிறுநீர் வழியாக உடலில் உள்ள அதிகப்படியன நீர் வெளியேறி உடற்பருமன் குறையும்.

பொன்னாவரைக் கீரையின் விதை மற்றும் இலைகளை நன்றாக விழுது போல அரைத்து 5 கிராம் அளவு சாப்பிட்டு வெந்நீர் அருந்த மலம் நன்கு கழியும். பொன்னாவரைக் கீரையின் விதைகளை நன்றாக அரைத்து சாப்பிட்டு குளிர்ந்த தண்ணீரைக் குடித்தால் உடல் அசதி மறந்து புத்துணர்ச்சி உண்டாகும்.

பொன்னாவரைக் கீரை விதைகளை பசும்பால் சேர்த்து அரைத்து 1 கிராம் அளவு குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் கக்குவான் இருமல் நீங்கும். பொன்னாவரைக் இலைகளுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து உடலில் பூசிக்குளித்தால் சொறி, சிரங்கு தோல் பாதிப்புகள் மறையும்.

பொன்னாவரைக் கீரையை நன்கு அலசி சுத்தம் செய்து 200 மில்லி லீற்றர் நீரில் போட்டு 1/3 பங்காக சுண்டும் வரை காய்ச்சி 30 மில்லிலீற்றர் அளவு காலை, மாலை குடித்து வந்தால் மனநல பாதிப்புக்கள் குணமடையும்.

**பொன்னாவரை இலை அடை**

ஒரு கப் குப்பைமேனி இலை, அரை கப் சிவத்தப் பச்சரிசி, பாசிப்பயறு அரைக் கப் சிறிது உப்பு, தேங்காய்ப்பூ சிறிதளவு பொன்னாவரசு இலையுடன் பச்சரிசி, பாசிப்பயறு இவற்றை கிரைண்டரில் நன்கு அரைத்து அரித்து எடுத்து தேங்காய்ப்பூ உப்பு சேர்த்து குழைத்து அடையாகத் தட்டி நல்லெண்ணெய் அல்லது நெய்யில் பொரித்து சாப்பிட்டு வர உடலில் நோயெதிர்ப்பு சக்தி அதிகரிப்பதுடன் மலம் நன்கு கழியும். நீரிழிவு நோயாளிகள் மேற்படி அடையை தேங்காய்ப்பூ சேர்க்காமல் பயன்படுத்தலாம்.

**பொன்னாவாரை இலைசூப்**

பொன்னாவரை இலை 4 கைப்பிடி, வெங்காயம் கால் கப், தக்காளி-2, பெஞ்சீரகம் தேவையான அளவு, சீரகம் தேவையான அளவு, துவரம் பருப்பு- 50 கிராம், இலவங்கப்பட்டை, ஒரு துண்டு, இஞ்சி ஒரு துண்டு, உள்ளி 5 பல், மல்லி 25 கிராம், உப்பு தேவையான அளவு, மிளகு-5.

மல்லியை நன்கு அரைத்து பெருஞ் சீரகத்தையும் சேர்த்து அரைக்காத பொன்னாவரை இலையை கழுவி அரிந்து நீரில் வேகவிடவும். அதில் அரைத்த விழுது உப்பு, வெங்காயம் அரைவாசி சேர்த்த, துவரம் பருப்பையும் வேகவைத்து வெந்த பொன்னாவரசு இலையில் சேர்க்கவும். வாணலியை அடுப்பில் வைத்து சிறிது நெய் சேர்த்து அதில் சீரகம், இலவங்கப்பட்டை போட்டு வெடித்து வந்ததும். இஞ்சி, உள்ளி அரைத்து விழுதாக போட்டு தக்காளி. மிகுதியாக வெங்காயம் போட்டு கிளறி சூப்பை ஊற்றி கிளறி விடவும் தேவையானால் மிளகு தூள் சிறிதளவு சேர்க்கவும். கலக்கி ஆறவிட்டபின் சூப்பை பருகலாம். உடற்சூடு உடல் வலி ஆகியவை நீங்கி மலம் நன்கு கழிவதுடன் நாட்பட்ட தோல் நோய் உடையவர்களுக்கும் நீரிழிவு நோயாளர்களுக்கும் சிறந்த சூப் வகையாகும்.

குறிப்பு:- பொன்னாவரசு கீரையை நீரிழிவு நோயாளிகள் வாரத்தில் 3 நாட்கள் சாப்பிடலாம். உடற்பருமனை குறைக்க முக்கியமான மூலிகை பொன்னாவரசு ஆகும்.

## இன்று ஒரு தகவல் 82



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# காதல் பறவைகள்

பரிவு, பாசம் இவை எல்லாம் நம்மிடம் மடடும் தான் இருக்கிறது என்று நினைத்து கொண்டு இருக்கிறீர்களா?

நம்மிடம் நிஜமாகவே இருக்கிறதோ, இல்லையோ. இருக்கும் என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றோம். ஆனால் சில பறவைகளிடம் இருக்கின்ற பாசம் பாருங்கள்... அதை எல்லாம் நினைத்துப் பார்க்கிறதுக்கே ஆச்சரியமாக இருக்கின்றது.

நாரைகள் இருக்கின்றது அல்லவா... அதிலே 'சாரஸ் ஸ்கிரீன்' என்று ஓர் இனம்! இந்த நாரைகள் இந்தியாவிலே இராஜஸ்தான் காடுகளிலே தான் அதிகமாக இருக்கின்றதாம். நாரை வகையிலேயே இந்த இனம் தான் மனிதனுடைய உயரத்திற்கு வளருமாம். உடம்மைப் பொறுத்தவரைக்கும் மனிதனுடைய உயரம்! மனதைப் பொறுத்தவரைக்கும் அதைவிட அதிக உயரம்! இதனுடைய தலை சிவப்பு நிறம். உடம்பு -நீலம் கலந்த சாம்பல் நிறம். அதிக உயரத்தில் பறக்கும். இரண்டும் ஜோடியாக வானத்திலே மிதந்து போகின்ற அழகே அழகு!

பறவைகளிலேயே 'சாரஸ் ஸ்கிரீன்' ஜோடி தான் மிகவும் அன்பாகவும் நெருக்கமாகவும் வாழக்கூடியது. விவாகரத்து என்ற வேலையெல்லாம் அதனிடம் கிடையாது. ஒரு தடவை ஜோடி சேர்ந்துவிட்டது என்றால் கடைசி வரைக்கும் இணை பிரிவதில்லை. நின்று கொண்டு தான் சாப்பிடும். பறக்கின்ற போது மட்டும் என்னவாம்? அப்பவும் ரொம்ப நெருக்கமாகத்தான் பறந்து கொண்டு போகும், இரை தேடும் விடயத்திலேயும் இப்படித்தான். தனியாக எங்கேயும் போவதில்லை.

போன வாரம் ஒரு கல்யாணத்திற்கு போயிருந்தேன். ஒரு நண்பர் வந்திருந்தார். "என்ன சார்! மனைவியை அழைத்துக்கொண்டு வரவில்லையா" என்று கேட்டேன். "அது என்னத்திற்கு சார் வீண் தொந்தரவு" அது புறப்படுகின்ற வரைக்கும் நான் காத்துக் கொண்டிருந்தால் அதற்குள்ளே இங்கே கல்யாணம் முடிந்து போய்விடும்! அது தான்... நான் மட்டும் ஓடி வந்துவிட்டேன் என்றார். இதை சொல்லும் போதே ஏதோ பந்தயத்திலே ஜெயித்தது மாதிரி ஒரு வெற்றிக் களிப்பு அவர் முகத்திலே!

இது மாதிரி செய்தி எல்லாம். அந்த நாரைகளுக்குத் தெரிந்தால் அதிகமாக கோபப்படும். நேராக வந்து கொத்திவிட்டு போனாலும் போகும்.

ராஜஸ்தானிலே உள்ள கிராமங்களிலே குஞ்சுப் பறவையாக இருக்கும் போதே இந்த நாரைகளை வீடுகளிலே வளர்க்கிறார்கள். ஏன் தெரியுமா? அவையெல்லாம் நாய் மாதிரி நன்றி விசுவாசத்துடன் நடந்து கொள்கின்றதாம்.

ஒருவர் தன் வீட்டிலே, இந்தப் பறவையை வளர்த்துக் கொண்டிருந்தாராம். பண்டிகை வந்திருக்கின்றது. ஆண் பறவையை துப்பாக்கியாலே சுட்டு, சமைத்து சாப்பிட்டு விட்டார். பண்டிகையை அவரும் அவருடைய குடும்பமும் சந்தோஷமாக கொண்டாடி விட்டார்கள். ஆனால் தன்னுடைய துணையை இழந்த அந்த பெண் பறவை என்ன செய்தது தெரியுமா? மூன்று நாள் வரைக்கும் எதுவும் சாப்பிடவில்லை. பட்டினியாகவே கிடந்தது! கடைசியில் அப்படியே இருந்து செத்துப் போய்விட்டது. இதை கண்ணாலே பார்த்த பல பேர் அதற்குப் பிறகு சாரஸ் ஸ்கிரீனை கொல்லுவதில்லையாம்.

இந்தப் பறவைக்கு 'டான்ஸ்' எல்லாம் ஆடத் தெரியுமாம். அழகாக நடனம் ஆடும். அதற்கு 'நாரை நடனம்' என்று பெயர். முதலிலே ஒரு குறிப்பிட்ட இடத்திலே போய் நிற்கும். வண்டிச்சக்கரம் சுற்றுகின்ற மாதிரி சுற்றிக் கொண்டே இருக்கும். அதன் பிறகு தலையை மேலேயும் கீழேயும் ஆட்டும். தரையிலே கிடக்கின்ற இறகுகளையும் சின்னச் சின்ன கல்லையும் தன் வாயாலே கவ்வி அதையெல்லாம் அழகாகத் தூக்கிப் போடும். அழகான இறக்கையை வேகமாக அடித்துக் கொண்டே தாவித் தாவி ஓடும்.

இந்த நடனம் சுமார் 20 நிமிடம் வரைக்கும் நடக்கும். ஒரு கூட்டத்தில் ஏதாவது ஒரு பறவை ஏதாவது ஒரு காரணத்திற்காக நடனமாட ஆரம்பித்து விட்டது என்றால் அந்தக் கூட்டத்திலே உள்ள எல்லாப் பறவைகளும் ஒன்றாக சேர்ந்து கொண்டு ஆட ஆரம்பித்து விடும். கூட்டமாக சேர்ந்து ஆடுகின்ற அந்தக் காட்சி பார்ப்பதற்கு மிகவும் நன்றாக இருக்குமாம்.

இது சத்தம் போட்டால் அதுவே 'ட்ரம்பட்' வாசிக்கிறது மாதிரி இருக்கும். பாசமுள்ள இந்தப் பறவை இனத்தை யாராவது பார்க்க ஆசைப்பட்டால் வண்டலூர் உயிரியல் பூங்காவிலே போய்ப் பாருங்கள்.

ஆமாம் பாசத்தை இப்போதெல்லாம் மிருகக்காட்சி சாலையிலே தான் போய் தேட வேண்டியிருக்கிறது.

ஏன்? பீச்லே தேடக்கூடாத என்று கேட்பீர்கள்! ஏற்கனவே நான் தேடிப்பார்த்து விட்டேன். என்ன காதிலே விழுந்தது தெரியுமா?

ஒரு இளம் ஜோடி...

ரொம்பவும் அன்பு பாசம் உள்ளவர்களாக தெரிந்தது. கிட்டப்போய் என்ன பேசுகின்றார்கள் என்று ஒட்டுக் கேட்னே. அந்தப் பையன் கேட்டான்! "எப்ப டார்லிங் நம்ம கல்யாணம்?" என்று அதற்கு அந்த பெண் சொன்னது கொஞ்சம் பொறுங்க எனக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையும் உங்களுக்கு ஒரு நல்ல பெண்ணும் கிடைக்கட்டும் அப்படி என்று சொன்னாள்.

இதற்குத்தான் சார் நான் அப்போதே சொன்னேன் வண்டலூருக்கே போங்கள் என்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலிக்கொடியை அறுத்த திருடர்கள் துரத்திச் சென்று பிடித்த இளைஞர்கள்

## துணிகர செயலுக்கு பலர் பாராட்டு

(முறிகண்டி)

தேவாலயத்திற்கு முக மாலையில் வழிபாட்டுக் காகச் சென்ற பெண் ஒருவ ரின் தாலிக்கொடியை அறுத் துக்கொண்டு இரண்டு இளை ஞர்கள் மோட்டார் சைக் கிளில் தப்பித்து ஓடி யதை அவதானித்த முக மாலை பகுதி இளை ஞர்கள்,

பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு தக வல் வழங்கியதுடன் திருட ர்களைப் பின் தொடர்ந்து சென்றுள்ளனர்.

பளை பொலிஸார் மற் றும் இராணுவத்தினர் துரித மாக செயற்பட்டு ஆனை யிறவுப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளுடன் திருடர்களை பிடித்ததுடன், அவர்களிடமிருந்து நகை யினையும் மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொட ர்பில் பளை பொலிஸார் விசா ரணை மேற்கொண்டு வரும் நிலையில், குற்றச் செயலைத் தடுக்க உதவிய இளைஞர் களை பலரும் பாராட்டி வரு கின்றனர். (நி-6-100)




# பூநகரி சீமெந்து தொழிற்சாலை தொடர்பில் கலந்துரையாடிய அமைச்சர்

(அக்கராயன்)

பூநகரி, பொன்னாவெளி பிர தேசத்தில் சிமெந்து தொழிற் சாலை உள்ளிட்ட பல முதலீடு களை அமைப்பதற்கு திட்ட மிடப்பட்டு வருகின்ற நிலையில், சுற்றுச் சூழலுக்கும் பிரதேச மக்களுக்கும் ஏற்படக்கூடிய சாதக, பாதகங்கள் தொடர்பாக மக்க ளுடன் ஆராயும் கலந்துரை யாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

பூநகரிப்பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற குறித்த இக் கலந் துரையாடலில் சமூகப் பிரதி நிதிகள், பொதுமக்கள் துறைசார் அதிகாரிகள், என பலர் கலந்து கொண்டு தமது கருத்தக்களை தெரிவித்திருந்தனர்.

இதன்போது கலந்துரை யாடலில் கலந்துகொண்ட பொது மக்கள் பூநகரி, பொன்னாவெளி பிரதேசத்தில் அமைக்கப்பட வுள்ள தொழிற்சாலைகள் மற் றும் முதலீடுகளால் மக்களு க்கும், பிரதேசத்தின் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்புகள் இல் லையென விஞ்ஞான ரீதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதனால் எவ்வித பாதிப்புகளும் ஏற்படாது என உறுதிப்படுத்த ப்படுமாயின் அவற்றை நடை முறை ரீதியாக செயற்படுத்து வதில் எந்த ஆட்சேபனையும் தமக்கில்லை என்றும் அவ்வாறான முதலீடுகளுக்கு தாம் தடையாக இருக்கப்போவ தில்லை எனவும் தமது உண ர்வுகளை தெரிவித்தனர்.

பொதுமக்களின் கருத்துக் களை கேட்டறிந்தபின் கருத்து அமைச்சர் தெரிவித்ததாவது,

வடக்கில் பூநகரி நகரை ஒரு பொருளாதார நகரமாக உரு வாக்கும் முயற்சியாகவே சிமெ ந்து தொழிற்சாலை, காற்றாலை மின் உற்பத்தி, சுண்ணக்கல் அகழ்வு, கடற்பாசி வளர்ப்பு, கடலட்டைப் பண்ணை உள்ளி ட்ட பல திட்டங்கள் முன்னெடுக்க படவுள்ளன இவற்றால் மக்களு க்கோ அல்லது பிரதேசத்தின் சுற்றுச் சூழலுக்கோ எதுவித பாதி ப்புகளும் இல்லாது முழுமை யான விஞ்ஞானரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சாதகமான பதில் கிடைக்கும் பட்சத்திலேயே திட்டம் நடை முறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-350)

# பல திருட்டுகளுடன் தொடர்புடைய 6 சந்தேக நபர்கள் கைது

(தருமபுரம்)

பல திருட்டுச் சம்பவங்க ளுடன் தொடர்புடைய 6 சந்தேக நபர்களை அக்கராயன் பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா போன்ற இடங்களில் பல்வேறு திருட்டுச் சம்பவங்க ளுடன் தொடர்புடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்ய ப்பட்டுள்ளனர்.

இதன்போது ஒரு பகுதி தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் கைதான சந்தேக நபர்கள் கிளி நொச்சி, வவுனியா பகுதியை சேர்ந்தவர்கள் என அக்கராஜன் பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி தெரிவித்தார். (நி-6-316)

காலத்தின் தேவைக்கேற்ப தொழில்நுட்ப அறிவு கொண்ட எதிர்கால சந்ததியினரை உரு வாக்கும் நோக்கில் என் கனவு யாழ். செயற்றிட்டத்தின் கீழ், டி.பி. எடியுகேசன் நிறுவனத்தனத்தால் சாவகச்சேரியில் அமைக்கப்பட்ட இலவச கோடிங் கற்கை நிலையம் கடந்த வெள்ளிக் கிழமை மாண வர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

(படம்- சுபேசன்)




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3077

வைதேகி




பாமினி




கஸ்தூரி




யுகதுஷா




நிரோபா




வருண்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 443





ஆகையால், பெரும்பாலும் நடந்து வந்தேன். கொஞ்சம் நீந்தியும் வந்தேன். இப்போது இந்த யானை கடலில் இறங்கிச் சென்றால் பயப்படுவாயா?

கடலிலேயே என்னைத் தள்ளிவிட்டாலும் கவலையில்லை. நான்தான் சமுத்திர குமாரி ஆயிற்றே? தாங்கள் தானே பெயர் கொடுத்தீர்கள்?

உன் படகு இருக்குமிடம் சென்றதும் அதில் நாம் ஏறிக்கொள்வோம். நீதான் படகு தள்ளிக்கொண்டு வர வேண்டும். இரண்டு பேரையும் வைத்துத் தள்ள முடியும் அல்லவா?

பத்து வயது முதல் துடுப்புப் பிடித்த கரங்கள் இவை. பிரபு! அரண்மனைப் பெண் களைப்போல் மலரினும் மிருதுவான கரங்கள் அல்ல. தங்கள் சிநேகிதர் வந்தியத்தே வரை வைத்துத் தள்ளி வந்ததை அவர் சொல்லவில்லையா?

சொன்னார்! ஆனால் இன்று அதைவிட வேகமாகத் தள்ள வேண்டும். தொண்டமான் ஆற்றின் முகத்துவாரத்துக்கு அதி சீக்கிரமாய்ப் போய்ச்சேர வேண்டும்?"

இளவரசே! அவ்வளவு கொடூரமான காரியத்தை என்னை ஏன் செய்யப் பணிக்கிறீர்கள்? தங்களைச் சிறைப்படாமல் தப்புவிப்பதற்காக ஓடோடியும் வந்தேன். சிறைப்படுத்த வந்திருப்பவர்களிடம் தங்களைக் கொண்டு போய் ஒப்புவிக்கும்படி பணிக்கிறீர்கள். இந்த ஏழையின் பேரில் ஏன் இவ்வளவு கொடூரம்?"

பூங்குழலி! என் தந்தை சக்கரவர்த்தி நோய்ப்பட்டிருப்பது உனக்குத் தெரியும் அல்லவா?"தெரியும், ஐயா! வானத்தில் சில நாளாக வால் நட்சத்திரம் தோன்றுவது பற்றி ஜனங்கள் பேசிக்கொள்ளுவதும் எனக்குத் தெரியும்."

எந்த நொடிப் போதிலும் என் தந்தையின் வாணாள் முடிவுறக் கூடும் அல்லவா?

பூங்குழலி மௌனமாயிருந்தாள். அவர் ஒரு வேளை இவ்வுலகை நீத்துச் செல்ல நேரிட்டால், அவருக்கு எதிராக நான் சதி செய்து இராஜ்யத்தைக் கைப்பற்ற முயன்றேன் என்ற எண்ணத்துடன் அவர் போவது நல்லதா?"

சக்கரவர்த்தி தங்களைப் பற்றி ஒரு நாளும் அப்படி நம்பமாட்டார். இது பழுவேட்டரையர்களின் சூழ்ச்சி! அப்படிப்பட்ட பழுவேட்டரையர்களுக்கும் கூட நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்க விரும்புகிறேன்

எதற்காக, ஐயா?" உண்மையிலேயே எனக்கு இராஜ்யம் ஆளுவதில் ஆசையில்லை பூங்குழலி! வேறு எதில் தங்களுக்கு ஆசை?" "

படகில் ஏறி முடிவில்லாத கடலில் என்றென்றும் போய்க் கொண்டிருக்க வேண்டும் என்று ஆசை! கடல்களுக்கு அப்பால் இழந்த ஈழ நாட்டைப் போல் எத்தனையோ நாடுகள் இருப்பதாகக் கேள்வி. அந்த நாடுகளுக்கெல்லாம் போக வேண்டும் என்று ஆசை. அந்தந்த நாட்டு மக்களைப் பார்த்துப் பேச வேண்டும் என்று ஆசை!" "விந்தை! விந்தை!"எது விந்தை.

என் மனத்தில் குடி கொண்டுள்ள ஆசையே தங்கள் மனத்திலும் இருப்ப தைக் குறித்து ஆச்சரியப்படுகிறேன். தாங்கள் அப்படிக் கடல் பிரயாணம் தொடங்கும் போது என்னையும் அழைத்துப் போவீர்களா?"

முதலிலே, இப்போது நான் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றுகிறேன். அதற்கு நீ உதவி செயவாய் அல்லவா? தங்கள் சித்தம்!"

நீ உட்கார்ந்திருக்கும் பீடத்திலிருந்து இரண்டு பக்கமும் கயிறுகள் தொங்குகின்றன அல்லவா? அவற்றை எடுத்து உன்னைக் கெட்டியாகக் கட்டிக்கொள்." எதற்காக இளவரசே!"

யானை இப்போது மதங் கொண்டு ஓடப் போகிறது ஜாக்கிரதை பூங்குழலி.

தடவிக் கொடுத்த வண்ணம் அதன் காதண்டை ஏதோ சொன்னார். யானையின் நடைவேகம் திடீரென்று அதிகமாயிற்று. இளவரசர் யானையின் செவியண்டையில் குனிந்து மேலும் ஏதோ சொன்னார். அவ்வளவுதான், நடை ஓட்டமாயிற்று. துதிக்கையைத் தூக்கிக் கொண்டு ஒரு தடவை பயங்கரமான பிளிறல் சத்தம் போட்டுவிட்டு ஓடத் தொடங்கியது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஆணவம் வேண்டாம்



மாவீரர் அலெக்சாண்டர் ஒரு முறை கிரேக்க நாட்டை விட்டு புறப்பட்ட போது அவருடைய நண்பர்கள் அவரை பார்த்து, "நீங்கள் ஒருவேளை இந்தியாவுக்கு போனால் திரும்பி வரும்போது அங்கிருந்து ஒரு துறவியை கிரேக்கத்துக்கு கூட்டி வர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். இந்தியாவுக்கு வந்த அலெக்சாண்டரும் அதை நினைவில் வைத்துக் கொண்டு ஒரு நாள் துறவி ஒருவரை தேடி புறப்பட்டார்.

ஒரு கிராமத்தின் வழியாக அலெக்சாண்டர் செல்லும்போது நதிக்கரை ஓரமாக ஒரு துறவி இருப்பதாக அந்த கிராமத்து மக்கள் கூறினார்கள். "நீங்களே சென்று அந்த துறவியை என்னிடம் அழைத்து வாருங்கள்" என்றார் அலெக்சாண்டர். கிராமத்து மக்கள் அவரைப்பார்த்து சிரித்தார்கள்.

அலெக்சாண்டருக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர்கள் கூறினார்கள், கூப்பிட்ட இடத்துக்கெல்லாம் முற்றும் துறந்த துறவிகள் வரமாட்டார்கள். இதைக்கேட்டு கோபமடைந்த அலெக்சாண்டர் தன் உடைவாளை உருவிக்கொண்டு துறவி தியானம் செய்து கொண்டிருக்கும் ஆற்றங்கரையை நோக்கி புறப்பட்டான்.

துறவி அலெக்சாண்டர் வந்திருப்பதை கவனிக்காமல் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். அலெக்சாண்டர் அந்த துறவியை பார்த்து, நான் தான் உலகம் போற்றும் மாவீரன் அலெக்சாண்டர். என்னைக் கண்டு மரியாதை கொடுக்க வேண்டும் என்று உனக்குத் தோன்றவில்லையா?" என்றான். [illegible] களை திறந்து அலெக்சாண்டரை பார்த்து, "பெரிய மனிதர்கள் எவருமே தங்களுடைய பெரிய மனிதத் தன்மையை நிரூபித்துக் கொள்ள முயற்சி செய்வதில்லை. அப்படி அவர்கள் முயற்சி செய்தால் அவர்கள் சிறியவர்கள் என்பதற்கு தான் அடையாளம்" என்றார்.

அலெக்சாண்டர் கோபத்தின் உச்சிக்கே போய் விட்டான். அவன் துறவியைப் பார்த்து என் பின்னால் வரும்படி உனக்கு ஆணையிடுகிறேன் என்றான். துறவி சிறிதும் கோபப்படாமல், "யாருக்கு நீ ஆணை இடுகிறாய்? எங்களைப் போன்ற துறவிகள் எவருடைய உத்தரவுக்கும் கட்டுப்படுவதில்லை. இறைவனுக்கு மட்டுமே நாங்கள் கட்டுப்படுவோம். இறைவனைத் தவிர வேறு யாருக்குமே, எங்களுக்கு உத்தரவிட அதிகாரம் இல்லை" என்றார்.

உடனே அலெக்சாண்டர் கோபத்துடன் துறவியை பார்த்து, "நீ என்னுடன் வர மறுத்தால் உன் தலையை வெட்டி சாய்பேன்" என்றான். உடனே துறவி, முட்டாளே, நான் என்ற ஆணவத்துடன் நீ ஆடுகின்றாய். நீ ஏதோ என்னுடைய உடல் எனக்கு சொந்தமானது என்று எண்ணி என்னை மிரட்டுகிறாய், நான் என்னும் உன் ஆணவமே உன்னை அழிக்கும். எனவே அதை விட்டுவிடு என் போன்ற துறவிகள் எதற்குமே அஞ்ச மாட்டார்கள். அதனால் தான் பெரியோர், "ஆண்டிக்கு அரசனும் துரும்பு" என்றார்கள்.

அதனால் "நான்" என்ற ஆணவத்தை விட்டு ஆக வேண்டிய நல்ல செயல்களைப் பார்" என்றார்.

உடனே அலெக்சாண்டர் ஆணவம் நீங்கப் பெற்றவனாய் தன் வாளை அந்த துறவியின் பாதங்களில் வைத்து வணங்கி விட்டு சென்றான்.

நீதி : மனிதனுக்கு நான் என்ற ஆணவம் கூடாது. அது அவ்னையே அழித்துவிடும். எனவே ஆணவத்தை விட்டு நல்ல வழியில் நடக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசாங்கத்தை சமாளிப்பதுதான் சமகால நிர்வாகமாயிற்று

தமிழகத்தின் பொற்காலம் என்பது கர்ம வீரர் காமராஜரின் ஆட்சிக் காலமாகும்.

இருந்தும் ஒரு தேர்தலில் காமராஜர் தோற்கடிக்கப்பட்டார் என்பதற்குள் அரசியல் அநாகரிகம் எத்தன்மையதென்பது புரிதற்குரியது.

ஆம், நேர்மையான அரசியல் தலைவராக இருந்த காமராஜரை ஏனைய அரசியல்வாதிகள் தோற்கடித்தனர் என்பதன் மூலம் அங்கு நடந்திருக்கக்கூடிய ஊழல்கள், இலஞ்சங்கள், வாக்கு விற்பனைகள் எப்படி இருந்திருக்கும் என்பதைப் புரிந்து கொள்வதும் கடினமன்று.

இஃது ஒருபுறமிருக்க, தமிழகத்தில் இலவசக் கல்வியைக் கொண்டு வந்தவர் காமராஜர். ஆம், பாடசாலைக் கல்வியைப் பெற முடியாத காமராஜர் தனக்குக் கிடைக்காமல் போன பாடசாலைக் கல்வி தமிழகத்துப் பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டுமென பேரவாக் கொண்டார்.

அதன் காரணமாக அவர் முதலமைச்சராக இருந்தபோது இலவசக் கல்வியை ஆரம்பித்தார்.

இலவசக்கல்வி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அங்கு மாணவர்களின் வருகை மிகக் குறைவாகக் காணப்பட்டது.

இதனால் வேதனைப்பட்ட காமராஜர், ஒரு நாள் காரில் செல்கிறார். அது வயல்வெளி. அங்கு சிறுவர்கள் ஆடு மேய்த்துக் கொண்டு நிற்கிறார்கள். அதனை அவதானித்த காமராஜர் காரை நிறுத்திவிட்டு, ஆடு மேய்க்கும் சிறுவர்களை நோக்கி நடக்கிறார்.

பிள்ளைகாள் இன்று நீங்கள் பள்ளிக்குச் செல்லவில்லையா? காமராஜரின் கேள்விக்கு அச்சிறுவர்கள் இல்லை எனப் பதிலளிக்கின்றனர்.

ஏன்? பள்ளிக்குப் போகவில்லை. காமராஜரின் இந்தக் கேள்விக்கு, பள்ளிக்குப் போனால் நீங்களா சோறு போடுவீர்கள். ஆடு மேய்த்தால்தானே எங்களுக்குச் சோறு கிடைக்கும்.

தங்களுடன் கதைப்பவர் யார் என்பது கூடத் தெரியாத அந்தச் சிறுவர்கள் அளித்த பதிலால் திகைத்துப்போன கர்மவீரர்; தன் பயணத்தை இடைநிறுத்திவிட்டு தன் அலுவலகத்துக்கு விரைகிறார்.

அவசர அவசரமாக அதிகாரிகளை அழைக்கிறார். பாடசாலைகள் தோறும் மாணவர்களுக்கு உடனடியாக மதிய உணவு வழங்க வேண்டும் என உத்தரவிடுகின்றார்.

படியா மேதை இட்ட அந்த உத்தரவால் தமிழகத்திலுள்ள அத்தனை இலவசப் பாடசாலைகளிலும் மாணவர்கள் குவிகின்றனர்.

ஆம், அன்று ஆடு மேய்க்கும் சிறுவர்களுடன் கதைத்ததன் காரணமாகப் பிரச்சினை என்ன என்பதை இனங்கண்டு அதற்குத் தீர்வை எட்டியபோது காமராஜரின் இலவசக் கல்வித் திட்டம் வெற்றி பெற்றது.

இன்று தமிழகம் அறிவியலில் உயர்ந்து நிற்கிறது என்றால், அதற்கு மூலகாரணம் அன்று காமராஜர் எடுத்த நடவடிக்கை என்பது புரிதற்குரியது.

என்ன செய்வது காமராஜர் போன்ற தலைவர்கள் எங்கள் ஈழ மண்ணுக்குக் கிடைக்கவில்லை.

இப்போதெல்லாம் எங்கள் மண்ணில் பொய்க்குதிரைகளே ஓடுகின்றன.

மத்திய அரசாங்கத்தை சமாளிப்பது மட்டுமே முதன்மைக்குரிய நிர்வாகமாயிற்று எனும்போது நாம் என்னதான் செய்ய முடியும்.

## 24 நனோநீர் சுத்திரிகரிப்பு நிலையங்கள் வடக்கில்

(கொழும்பு)

வடமாகாணத்தில் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்தவும் அந்தப் பிரதேச மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் மேலும் 24 நனோ நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

அதன்படி, 24 நீர் சுத்திகரிப்பு நிலையங்களும் இம்மாதம் 6 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் மக்களிடம் கையளிக்கப்பட உள்ளன.

வவுனியா மாவட்டத்தில் 6 நனோநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 18 நனோநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் திறக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நனோநீர் சுத்திகரிப்பு இயந்திரம் நாளொன்றுக்கு சுமார் 2,000 லீற்றர் தண்ணீரை முழுவதுமாக சுத்தம் செய்யும் திறனைக்கொண்டவை என்று மீள்குடியேற்ற பிரிவு தெரிவிக்கிறது. (நி-6)

## மீண்டும் பெரமுனவில் இணைய தயாராகும் குமார வெல்கம

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம அரசியல் மாற்றத்திற்கு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படிஅவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொள்வதற்கு தயாராகவுள்ளார்.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கருத்துகளை பரிமாறிக்கொண்டுள்ளார்.

மேலும் புத்தாண்டுக்கு முன்னதாக பொதுக் கூட்டம் ஒன்றில் பெரமுனவுடன் இணைய அவர் முடிவு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை முன்னிறுத்தியதால் தான் பொதுஜன பெரமுனவுடன் மனமுடைந்து போயிருந்ததாகவும் தற்போது எந்தத் தடையும் இல்லாததால், பொதுஜன பெரமுனவில் இணைவதில் தனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# கடன்களைத் திருப்பி செலுத்த 2028 வரை கால அவகாசம் தேவை

## நிதியமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் 12 பில்லியன் அமெரிக்க டொலர் இருதரப்புக் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு 2028 ஆம் ஆண்டு வரை கால அவகாசம் தேவைப்படுவதாக இலங்கை நிதியமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

லண்டனில் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பத்திரப்பதிவுதாரர்களுடன் நடந்து வரும் பேச்சுவார்த்தையின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு முதல் திருப்பிச் செலுத்தாதுள்ள வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் முன்மொழிவின் அடிப்படையில் இறையாண்மை பத்திரதாரர்களுடன் உடன்பாடு எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு பணம் செலுத்துவதை ஒத்திவைத்து, 2028 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து 2042 வரை கடன்களை செலுத்துவதற்கான திட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கடன் வழங்குபவர்களை இலங்கை அரசாங்கம் கேட்டுள்ளதாக நிதியமைச்சின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே, இலங்கையுடன் தீவிரமாக பேச்சுவார்த்தை நடத்தவும் சர்வதேச நாணய நிதியத்தில் உள்ள மற்ற கடன் வழங்குநர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணி நிதி நிவாரணத்தில் இலங்கைக்கு உதவவும் தொடர்ந்து ஆதரவளிக்க சீனா விருப்பம் தெரிவித்துள்ளதாக, சீனாவின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி-6)

## தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாரான தாதியர்கள்

(கொழும்பு)

இன்றும் நாளையும் அனைத்து தாதியர்களும் மூன்று மணித் தியாலங்கள் கடமையிலிருந்து விலகி தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக அகில இலங்கை தாதியர் சங்கம் அறிவித்துள்ளது.

தாதியர் கொடுப்பனவு, சீருடை கொடுப்பனவு வழங்குதல் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு கோரி இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக சங்கத்தின் தலைவர் ரவீந்திர கஹடவல தெரிவித்துள்ளார். (நி-6)

## கஞ்சா பொதியுடன் இருவர் மீசாலையில் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கஞ்சா போதைப் பொருள் பொதியுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் இருந்து 5 கிலோ 100கிராம் கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டிருப்பதுடன் கடத்தலுக்கு பயன்படுத்திய மோட்டார்சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறையைச் சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு கஞ்சாவுடன் கைதாகியுள்ளனர்.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(நி-6-30)

## சந்தை வளாகத்தில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து தாருங்கள்

### வர்த்தகர்கள் கோரிக்கை

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட பொதுச்சந்தையில் நீண்ட காலமாக நீர் வசதிகள் சீராகக் கிடைக்கப் பெறாமையால் வர்த்தகர்கள், நுகர்வோர்கள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

சந்தை வளாக வடிகால் வாய்க்கால்கள் தூர்வாரப் படாமலும் மலசல கூடம் அசுத்தமாக இருப்பதால் வெளியேறும் துர்நாற்றங்களை வர்த்தகர்கள், நுகர்வோர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து குறித்த பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சந்தை வர்த்தகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-316)

## சீனாவின் விமானத்தில் நாடு திரும்பிய பிரதமர்

(கொழும்பு)

சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு பிரதமர் தினேஷ் குணவர்தன நாட்டை வந்தடைந்துள்ளார்.

சீனா ஈஸ்டன் எயார் லைன்ஸ் விமானம் மூலம் நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை பிரதமர் மற்றும் அவரது குழுவினர் வந்தடைந்தனர்.

சீனாவுக்கான ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாட்டில் இருந்து புறப்பட்ட பிரதமர், சீன ஜனாதிபதி மற்றும் அந்நாட்டு பிரதமர் மற்றும் சீன அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகள் பலருடனும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த விஜயத்தின் போது சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பல உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டதுடன் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீன அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களும் இடம் பெற்றன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

35



இதற்கு மரண தண்டனை கூட வழங்க ஏற்பாடுகள் உள்ளன என்றார்.

“சிங்களம் மட்டும்” அரச கரும மொழிச் சட்டத்துக்கு எதிரான உணர்வலைகளும் அதனை எதிர்த்த தமிழர்களுக்கு எதிரான உணர்வலைகளும் நாடு பூராகவும் தமிழர்கள் வாழும் பிரதேசமெல்லாம் பரவியதுடன் நாடு பூராகவும் இன வெறிப்பிரச்சாரமும் தாக்குதல்களும் தூண்டப்படவும் வழி விட்டது.

அன்றைய நாளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கரிநாளாக அறிவித்து அந்நாள் பாடசாலைப் பகிஷ்கரிப்பு, கடையடைப்பு போன்றவை இடம்பெற்றன. அன்றைய தினம் தலைநகர் கொழும்பில் காடையர்கள் தமிழர்களைக் கண்ட கண்ட இடங்கள் தோறும் தாக்கியிருந்தனர். கல்லோயா குடியேற்றப்பகுதிகளிலும் இனக் கலவரம் பலத்த சேதத்தை ஏற்படுத்தியிருந்தது.

**திருகோணமலை நகரை நோக்கிய பாதையாத்திரை**

தமிழர்களுக்காகவும் தமிழ் மொழிக்கும் அரச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் நீண்ட காலமாகவே போராடி வடக்கு-கிழக்கு மக்களிடையே பெரும்பான்மை ஆதரவைப்பெற்றிருந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் தலைமையில் இயங்கிக்கொண்டிருந்த தமிழரசுக்கட்சி “சிங்களம் மட்டும்” சட்டத்துக்கானதமிழ்பேசும்மக்களின் எதிர்ப்பினைவெளிக்காட்டு முகமாக 1956 ஓகஸ்ட் 19 இல் கிழக்கிலங்கையின் திருகோணமலை நகரை நோக்கிய பாதயாத்திரைத் திட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

வடக்கு- கிழக்குப் பிராந்தியத்திலுள்ள யாழ்ப்பாணம், மூதூர், மட்டக்களப்பு மற்றும் பொத்துவில ஆகிய பகுதிகளில் இருந்து தமிழர்களும் முஸ்லிம்களும் தமிழ் மொழி பேசுவோர் என்ற உணர்வில்

திருகோணமலை நோக்கி திரண்டு வந்திருந்தனர். அங்கு நடைபெற்ற மாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் பின்வருபவை முக்கியமான தீர்மானங்களாக அமைந்திருந்தன.

1. தற்போதுள்ள ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குப் பதிலாக கூட்டாட்சி அரசியலமைப்பை ஏற்படுத்துதல் வேண்டும்.

2. தமிழ்மொழியையும் சிங்கள மொழியையும் சமத்துவ நிலையையுடையதாகவும் நாட்டின் அரச கருமமொழிகளாகவும் பிரகடனம் செய்தல் வேண்டும்.

3. பிரஜாஉரிமைச்சட்டத்தையும் விதிகளையும் இரத்துச் செய்து எல்லாத் தமிழ் மக்களையும் இலங்கைக் குடிமக்களாக பிரகடனம் செய்தல் வேண்டும்.

4. தமிழ்மக்கள்வாழும் பாரம்பரியப் பிரதேசங்களில்மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்துதல் வேண்டும்.

மேற்படி முக்கிய கோரிக்கைகள் இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டதுடன் இவைகள் அனைத்தும் அவ்வாண்டு ஓகஸ்ட் 25 ஆம் திகதிக்குள் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

**சிங்களம் அரசகரும மொழிச்சட்ட அமுலாக்கமும் எதிர் விளைவுகளும்**

அலசிப் பார்க்கும்போது சிங்களம் மட்டும் சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னரே இனப்பிரச்சினை இந்த நாட்டில் ஆரம்பமாகியது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது அடையாளமாகத் தமது தமிழ் மொழியையே கருதுகின்றனர்.

“சிங்களமட்டும்” அரசகரும மொழிகள் சட்டத்தை நிறைவேற்றியமைக்கும் தமிழ் மொழிக்கு அங்கீகாரம் வழங்கப்படாமைக்கும் எதிரான தமிழ் மக்களின் சாத்வீகப் போராட்ட நடவடிக்கைகளுக்கான அரசாங்கத் தரப்புபதில்கள் சாதகமிக்கதாக அமைந்திருக்கவில்லை.

மாறாக, சிங்களமொழியை அரச கருமமொழியாக அமுலாக்கும் நடவடிக்கையை அரசாங்கம்தீவிரமாக முன்னெடுக்கலானது. அரசபொது நிர்வாக அலுவல்கள் யாவும் சிங்களமொழியில் இடம்பெறல் வேண்டும் எனதிறைசேரி சுற்றறிக்கை வெளியிட்டது.

உண்மையில், இந்தச் “சிங்களம் மட்டும்” மொழிக்கொள்கையானது மீதமிருந்த பிரித்தானிய சிந்தனைகளைக் கொண்டிருந்த ஆங்கி லம் பேசும்அலுவலர்களில் குறிப்பிட்ட அலுவலர்களை (குறிப்பாக தமிழர்களை) தந்திரமாகவும் நுட்பமான வழியிலும் வெளியேற்றி விட்டு சிங்களம் மட்டும் பேசும் தேசிய வாதிகளை அரச சேவையில் நிரப்புவதற்கு வழி விட்டது” என்பதும் நோக்கத்தக்கது.

அதாவது, பிரித்தானியரின் காலணித்துவ ஆட்சிக் காலத்திலிருந்து ஆங்கிலக்கல்வியை பெற்றமைனால் நன்மையடைந்து பொதுச்சேவை யில் அதிக விகிதத்திலிருந்த தமிழர்களை ஒழிக்கும் நடவடிக்கையாகவே “சிங்களம் மட்டும்” அரசகரும மொழிக் கொள்கை அமைந்திருந்தது. இதனால், சிங்கள மொழியில் வேலை செய்ய மறுத்த பல தமிழ் அலுவலர்கள் தமது பதவிகளை இழந்தனர்.

சிங்களத்தில்கடமை புரிவதாக எழுத்துமூலம் உறுதி வழங்க ஒவ்வொரு ஊழியரும்பணிக்கப்பட்டனர். சிங்களம்கற்பிக்கதமிழ்பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் அனுப்பப்பட்ட போதும் கூட தமிழர்களின் எதிர்ப்பினால் அவ்வாசிரியர்கள்திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது. அவ்வாறே, சிங்கள மொழியைக்கற்கக் கூடாது என தமிழ் மாணவர்களுக்கு தமிழ் அரசியல் வாதிகளால் கட்டளையும் இடப்பட்டது.

உண்மையில், “சிங்களம்மட்டும்” சட்டத்தினால்அதுவரை இரு சமுதாயத்தினரும் சமமான வகையில் அனுபவித்து வந்த ஒரு குறிப் பிட்ட உரிமையை திடீரென ஒரு சமூதாயத்தினர் (அதுவும் சிறுபான்மையினர்) இழக்கும்போது தாம் பாரபட்சத்துக்கு உற்படுத்தப்படுகின்றோம் என்ற உணர்வலையை அதுதமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

அதுமட்டுமல்ல சிங்களம் தெரியாத பல தமிழ் தொழிசார் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறி லண்டன், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு இடம்பெயர்ந்தனர்.

**“தனிச் சிங்களசட்டம்” தமிழர்களுக்கு ஏற்படுத்திய தாக்கம்**

சிங்கள மொழியினை மட்டும் அரசாங்கம் முழு மூச்சுடன் அரசாங்க மொழியாக அமுல் செய்தமை தமிழர்களை மட்டுமன்றி இலங்கையின் குறுகிய கால அரசியலிலும் நீண்டகால அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அரச சேவையில் பதவி உயர்வு செய்தவற்கும் புதிதாக சேருவதற்கும் சிங்களம் கற்பது அவசியமாயிற்று.

அரச சேவையில் புதிதாக சேருபவர்கள் 3 வருட காலத்தினுள் சிங்கள மொழி தேர்ச்சி பரீட்சையில் சித்தியடைய வேண்டும். இல்லாதுவிடில் வேலையில் இருந்து நீக்கப்படும் ஆபத்து இருந்தது. சிங்களம் அரசாங்க மொழியாக்கப்படும் முன்பு அரச சேவையில் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட ஒரு காலத்தினுள் சிங்கள மொழி தேர்ச்சி பரீட்சையில் சித்தியடையத் தவறின் அவர்களுக்கு உயர் பதவியோ,பதவி உயர்த்தலோ, வருடாந்த சம்பள உயர்வோ கிடையாது.

இதனால் ஏராளமான தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டார்கள். தமிழ் பேசும் மக்களுக்கு தனிச் சிங்களத்தில் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அரச திணைக்களங்களில் உபயோகிக்கும் படிவங்கள் தனிச் சிங்களத்தில் இருந்தன.

இச் சட்டத்தால் அரச சேவையில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் படிப்படியாக வீழ்ச்சி கண்டது. குறிப்பாக, 1956 இல் நிர்வாக சேவையில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் 30 சதவீதமாக இருந்தது. அது 1970 இல் ஐந்து வீதமாக வீழ்ச்சி கண்டது.

இதுபோன்றே எழுதுவினைஞர் சேவையில் 1956இல் 50 சதவீதமாக இருந்தது. அது 1970 இல் ஐந்து வீதமாக வீழ்ச்சி கண்டது. 1956இல் தொழில்சார் சேவையில் (இஞ்சினியர், டாக்டர் போன்ற சேவை) 60 சதவீதம் தமிழர்கள் இருந்தார்கள். அது 1970இல் 10 சத வீதமாக வீழ்ச்சி கண்டது.

**வாகன இலக்க தகட்டில் சிங்கள ஸ்ரீக்கு எதிரான போராட்டம்**

1957 இல் சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசின் போக்குவரத்து அமைச்சர் மைத்திரிபால சேனாநாயக்கா வாகன இலக்கத்தகடுகளில் அதுவரை பாவனையிலிருந்த ஆங்கிலஎழுத்துக்குப் திலாக சிங்கள சிறி எழுத்து பாவிக்கப்படல் வேண்டுமெனப் பணித்தார். இதனால் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் இலங்கைத் தமிழரசுக்கட்சி தலைமையில் சிறி எதிர்ப்புப் போராட்டம் வெடித்து. சிங்கள “ஸ்ரீ” க்கு எதிரான போராட்டத்தை முதலில் ஆரம்பித்தவர் பா.உ.சி. சுந்தரலிங்க மாவார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, சிங்கள 'சிறி' க்குப் பதிலாக 'பண்டா-செல்வா' ஒப்பந்தத்தின் கொள்கையின் பிரகாரம் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் சிறி (ஸ்ரீ) யைப் பயன்படுத்த சட்டத்தில் இடம் தரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தது. (ஸ்ரீ என்பது தமிழ் எழுத்தல்ல. இது கிரந்த எழுத்தாகும்).

இந்த வேண்டுகோள் பண்டார நாயக்கவினால் நிராகரிக்கப்பட்டது.

இவ்வாறு தமிழ் கட்சிகள் கூட்டாக அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தபோதும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. -

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்...

டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 5 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன் புதிய விலை 371 ரூபாயாகும். ஒக்டேன் 95 ரக பெற்றோலின் விலை 8 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 456 ரூபாயாகும்.

ஓட்டோ டீசல் 5 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 363 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுப்பர் டீசல் விலை 7 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

அதன் புதிய விலை 468 ரூபாயாகும். அத்துடன், மண்ணெண்ணெய் விலை 26 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 262 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ந-7,10)

## முன்னாள்...

கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.


மஹஜன சம்பத
திகதி 2024.03.31
சீட்டிழுப்பு இலக்கம் 5436
A 9 6 9 8 8 0

அத சம்பத
A 9 8 8 0
சீட்டிழுப்பு இலக்கம் 0011
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.03.31
சீட்டிழுப்பு இலக்கம் - 1466
P 13 52 56 64 P
76533

மெகா பவர்
திகதி 31/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1784
C 14 14 20 31 32
28991

லக்கி 7 VIP
திகதி 2024.03.31
சீட்டிழுப்பு இலக்கம் 0262
E 5 9 2 5 8 0 E

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3678
சீட்டிழுப்பு திகதி 31.03.2024
M 13 53 56 59
M 63212

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.31
சீட்டிழுப்பு இலக்கம் 0745
துலாம் 13 40 52 58 துலாம்
59842 21


இவர், இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற பேருந்துகளில் வெடிகுண்டு வைப்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு புலனாய்வு தகவல் வழங்கிய குற்றச்சாட்டில் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட சிறைத் தண்டனை பெற்றவர் என பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப்பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் விடுதலைப் புலிகளின் முன்னாள் தலைவர்களின் படங்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் சின்னங்களுடன் பேஸ்புக் கணக்கை நடத்தி, பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டு, அமைப்பை மறுசீரமைக்கும் நோக்கில் பிரசாரம் செய்து வருவதாக செய்த முறைப்பாடு தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

முன்வைக்கப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்ட நீதவான், சம்பவம் தொடர்பான விசாரணைகளை முடித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவித்ததுடன், சந்தேகநபரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-7,10)

## தெல்லிப்பழை...

இதன் பிரகாரம் நேற்று கல்லூரி நிர்வாகத்தினர் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

யூனியன் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

அதன்போது, கார்த்திகைப் பூ வடிவிலும், போர் டாங்கி வடிவிலும், இல்ல அலங்கரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அவை தொடர்பிலான புகைப்படங்கள் சமூக வலைத் தளங்களில் வைரலாகி இருந்தன.

அது தொடர்பில் விளையாட்டு போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை பொலிஸார், இராணுவ புலனாய்வாளர்கள் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினர் பாடசாலைக்கு நேரில் சென்று இல்லங்களை பார்வையிட்டு, புகைப் படங்கள், காணொளிகள் என்பவற்றை சேகரித்திருந்தனர்.

மேலும் விசாரணைகளுக்காக நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்திற்கு வருகை தருமாறு பாடசாலை நிர்வாகத்திற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் அதிபர் உள்ளிட்டவர்கள் பொலிஸ் நிலையம் சென்றிருந்த நிலையில், பொலிஸார் அவர்களிடம் வாக்குமூலங்களை பெற்றனர்.

இதேவேளை அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில், இடம்பெற்ற விளையாட்டு போட்டியில் இல்ல அலங்கரிப்பு மற்றும் விநோத உடை போட்டிகள் தொடர்பிலான படங்கள் சமூக வலைத் தளங்களில் வெளியாகி சர்ச்சைகள் ஏற்பட்டதை அடுத்து, வடமாகாண கல்வி அமைச்சு பாடசாலை அதிபர்களுக்கு, இல்ல அலங்கரிப்பு மற்றும் விநோத உடை போட்டிகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,10)

## தமிழர் சார்பில்...

கருத்துரைத்த தமிழரசுக் கட்சியின் [illegible]

குறித்த யோசனையினை அடியோடு நிராகரித்ததோடு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்க வேண்டும் என்ற முன்மொழிவுக்குத் தமிழ் மக்களிடத்தில் ஆதரவு கிடையாது.

இந்த முயற்சியானது தமிழ் மக்களுக்கான சாதகமான நிலைமைகளை உருவாக்காது என்றார்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் தமிழரசுக் கட்சி இன்னமும் தீர்மானிக்கவில்லை என அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுசேர்ந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதா? அல்லது தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு வழங்குவதா? என்பது தொடர்பில் ஒரே நிலைப்பாட்டில் செயற்படுகின்ற தமிழ்த் தேசிய கட்சிகளுடன் இணைந்து பேசி முடிவெடுக்கப்படும் என ரெலோ அமைப்பின் ஊடகப்பரிவு பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகத் தமிழர் தரப்பில் இருந்து ஒருவரை நியமிக்கும் யோசனை தொடர்பில் இதுவரை உரிய தீர்வுகள் எட்டப்படாத நிலையிலேயே உள்ளது. (ந-7,10)

## மே...

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பன தற்போது தொகுதி கூட்டங்களையும், மகளிர், இளைஞர் மாநாடுகளையும் நடத்தி வருகின்றன.

விமல் வீரவன்ச அணி, நிமல் லான்சா அணி என்பனவும் மக்கள் சந்திப்புக்களை நடத்தி வருகின்றன.

இந்நிலையில், மே தினக் கூட்டத்தை மிகவும் பிரமாண்டமாக நடத்திப் பலத்தைக் காட்டுவதற்கும் கட்சிகள் [illegible]

தற்போது இடம்பெற்று வருகின்றன.

அடுத்து என்ன தேர்தல் என்பது தொடர்பான அறிவிப்பு தமிழ், சிங்கள புத்தாண்டு முடிந்த பின்னர் அதிகாரபூர்வமாக வெளியாகும் எனத் தெரிய வருகின்றது.

முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படவுள்ளது. இதற்கான முடிவை ஜனாதிபதி எடுத்துவிட்டார் என்று அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

எனவே, மே தினக் கூட்டத்தைப் பிரமாண்டமாக நடத்தி, அன்று முதல் தேர்தல் பிரசாரத்தையும் தீவிரப்படுத்த கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு தொகுதி அமைப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசியல் கூட்டணிகளும் அடுத்த மாதம் முதல் மலரவுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணி ஏப்ரல் 5ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. (ந-7,10)


உத்தியோகபூர்வ முடிவுகள்
31.03.2024 வெற்றி வாரம் 144
U 2 4 2 1 8 8
48832 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் 32,289,420.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
2410 2024.03.31 ஞாயிறு
30 66 74 76 X
52596
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,351,895.20

சனிதா
திகதி 2024.03.31 வெற்றி வாரம் 4571
18 24 61 67 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,787,108.40

சசிரி
461 2024.03.31
08 28 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,775,760/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4122
சீட்டிழுப்பு திகதி 2024.03.31 தினம் ஞாயிற்றுக்கிழமை
12 18 26 38 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.15,749,224.40
206471

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 18 08 44 67 71
1586 மஞ்சள் 31.03.2024 ஞாயிறு
326179
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 515,142,066.60

அட கோட்டிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 2236 2024.03.31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.103,271,524/-
39 46 56 65 H
367568


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0042)

076 825 7716 (ஆகாஸ்)


## மணப்பெண் தேவை

- திருகோணமலை, இந்து, கௌரவ குடும்பம், 1993, பூராடம், BSc Engineering, New zealand மணமகனுக்கு மணமகள் தேவை.
- கொக்குவில், இந்து, கௌரவ குடும்பம், 1985, ரோகினி, Business man, Canada, divorce மணமகனுக்கு மணமகள் தேவை.
- கரவெட்டி - புங்குடுதீவு, இந்து, கௌரவ குடும்பம், 1986, பூரட்டாதி, Graduate, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
- கந்தர்மடம், இந்து, கௌரவ குடும்பம், 1989, உத்தராடம், MSc, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவ குடும்பம், 1988, உத்தரம், BSc civil Engineering, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
- முல்லைத்தீவு, இந்து, கௌரவ குடும்பம், 1985, உத்தரம், Graduate, Denmark மணமகனுக்கு மணமகள் தேவை.
- சுருவில், இந்து, கௌரவ குடும்பம், 1987, அச்சுவினி, MSc, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
- பளை, இந்து, கௌரவ குடும்பம், 1984, அவிட்டம், PHD, Divorce, UK Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.

(317)

www.thaalee.com
077 539 3728
077 803 8193


இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
SOLA CHEMICAL COMPANY (PVT) LTD

| | | | |
|---|---|---|---|
| கல்சியம் நீக்கி | 4L | ~~2200~~ | 1400 |
| சலவைத் திரவம் | 4L | ~~3200~~ | 1600 |
| ஹான்ட் வோஷ் | 4L | ~~2800~~ | 1600 |
| டிஷ் வோஷ் | 4L | ~~1900~~ | 950 |
| மாபிள் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| டொய்லட் கிளீனர் | 4L | ~~2600~~ | 1400 |
| வோஷிங் பவுடர் | 3Kg | ~~1485~~ | 900 |

விசேட விலைக் கழிவு (296)

No.576/2C, Siyambalape road, Heiyanthuduwa, makola.
Reg No. PV00240433
288, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 0866, 0777 495 494

KBK | கந்தர்மடம் | கொழும்புத்துறை
கணக்கீடு
பிரத்தியேக வகுப்பு
A/L 2024, A/L 2025
புதிய பிரிவுகள் ஆரம்பம்
தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலம்
தொடர்புகளுக்கு : 077 452 0043 (Whatsapp)
திரு.க.பா.பாலகஜன் SLTS
B.Com(Jaf), H.N.Dip-in-Acc,
Dip-in-Edu, M.Com(Hons) Acc.Spl
(278)


## யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

(விலை குறைக்கப்பட்டது)

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 ½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக்கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.
மொத்தமாக 5 கோடியே 25 இலட்சம்
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)

தொடர்புகளுக்கு:
+447963743585 (Whatsapp)
021 222 7141 (Sri Lanka)
Email : jamesraj_uk@yahoo.co.lk
(225)


பௌதிகவியல் (A/L)
2024/2025/Repeat
தனிப்பட்ட/ குழு வகுப்புக்கள்
மீட்டலும் கடந்த கால
வினா விடைகளும்
ஆ.நித்தியானந்தன் BSc, Dip.in.Ed
076 799 9005
15 B, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(19050)


## ஆசிரியர் தேவை

French மொழியில் கற்பிப்பதற்கு விரைவாக ஆசிரியர் அல்லது ஆசிரியை தேவை. (316)

075 663 3949


V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0043)

கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு
தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.
A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து
(C-0043)
V2 GUEST 0743900360 0743900361


# மரண அறிவித்தல்

மலர்வு
12 - 10 - 1947



உதிர்வு
31 - 03 - 2024

## தேவேந்திரன் தையல்நாயகி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவேந்திரன் தையல்நாயகி அவர்கள் 31.03.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - இரத்தினம் தம்பதியினரின் ஏக புத்திரியும் கல்வயலைச் சேர்ந்த காலஞ்சென்ற வல்லிபுரம் - ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் தேவேந்திரனின் அன்பு மனைவியும் அமிர்தகௌரி(தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) ஸ்ரீதரன்(ஆசிரியர், பெரியபுலம் மகா வித்தியாலயம்), பிரபாகரன்(ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி), கருணாகரன்(ஆசிரியர் பெரியபுலம் மகா வித்தியாலயம்), சண்முகப்பிரியா(முன்னாள் ஆசிரியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கணநாதன்(தபாலக ஊழியர் சுழிபுரம்), கல்யாணி(ஆசிரியை, சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை), கோகுலவாணி(தாதிய உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை), கோகுலவர்தனி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்), சசிகரன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் தர்மீகன், பிரணவன், ஸ்ரீஜெனனி, ஸ்ரீஜெனகன், ஸ்ரீஜெனார்த்தனி, டிவ்யானி, விகாசினி, கம்ஷவர்தனி, அக்ஷரா, அகர்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற குழந்தைவேலு மற்றும் தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற வனசராணி மற்றும் ருக்குமணிதேவி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01.04.2024) மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இராமநாதன் வீதி,
கந்தர்மடம். 077 121 8955 (321)

தகவல்:
குடும்பத்தினர்

# கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் றோட் புத்தளம் எனும் முகவரியைச் சேர்ந்த லூத்மேரி ஜோன் ஜோன்சன் என்பவரின் மோட்டார் சைக்கிளுக்குரிய வாகன வருமான வரிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், புகைப் பரிசோதனைப் பத்திரம் என்பன கோண்டாவில் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர் வலம்புரி அலுவலகத்தில் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும். (ந)


வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை
சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(318)

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (323)

மலிவு விற்பனை
SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கு ஏற்ற நைலோன் / கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (C-0040)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இல. 303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
076 315 6470


# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி சிவகுமார் பராசக்தி

(ஓய்வுநிலை அதிபர்)

பிறப்பு 02.06.1958
இறப்பு 07.04.2018

ஆறாண்டு கடந்தாலும்
ஆறாத வடுவாய்
நீங்காத உம் நினைவுகள்
மட்டுமே எம்மிடம் மிச்சம்
அம்மா.

124, செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்
077 329 8114

(C-0041)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org